சாயி மகராஜ் குருவை தேடி
SAI MAHARAJ GURUVAI THEDI

ஆண்டு: 1	இதழ்: 3	ஜூலை - 2018	தட்சிணை: 10/-
VOL: 1	ISSUE-3	JULY - 2018	DONATION: 10/-

தனிச்சுற்றுக்கு மட்டும்



என் திருவடியை அடைந்த பக்தன்,
பெரும் பாக்கியவனாவான்...



ஜெய் சாய் ராம்

சமர்த்தா

டூர்ஸ் & டிராவல்ஸ்

ஷீரடி புனித யாத்திரை

OM

Spiritual Journey to Shiridi

சென்னையிலிருந்து விமான பயணம்

Package Price
₹9900/-
prices vary on the marked dates

வி.ஐ.பி.தரிசனம், 4 ஸ்டார் ஹோட்டல்
புனே-சீரடி ஏசி பஸ் உபட

ஜூலை: 1-2, 26-27
ஆகஸ்ட்: 10-11, 25-26

₹10,900/-
மும்பை வழியாக

வி.ஐ.பி.தரிசனம், 4 ஸ்டார் ஹோட்டல்
மும்பை-சீரடி ஏசி பஸ் உபட

பார்க்கும் இடங்கள்

மஹா கணபதி கோயில், ஸ்ரீ சனிதேவ் கோயில், ரேணுகாதேவி கோயில், வாஹேஸ்வரர் கோயில்

மேலும் விபரங்களுக்கு தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி

சமர்த்தா டூர்ஸ் & டிராவல்ஸ்

எண்.11, முதல் மாடி, வெங்டேஸ்வரா அக்ரஹாரம் ரோடு (சாய்பாபா கோவில் எதிரில்)
மைலாப்பூர், சென்னை-4. Email: samarthatoursandtravels21@gmail.com

98428 20509 / 73734 09000 / 044-4855 7749

சாயி மகராஜ் குருவை தேடி
SAI MAHARAJ GURUVAI THEDI

ஆண்டு-1 மலர்-3 ஜூலை-2018

வெளியிடுபவர் / ஆசிரியர்

V.ஸ்ரீராம்

இணை ஆசிரியர்

S.ஜெயந்தி

விளம்பர பிரிவு

திரு.T. கார்த்திகேயன், கோவை

8778874339

சிட்டி சர்க்குலேசன்

திரு.R. அபிஷேக், சென்னை

பொது ஜனத் தொடர்பு

திரு. அன்புக் கண்ணன்

கௌரவ ஆலோசகர்கள்

திரு. L காமராஜ், சென்னை

திரு.B.S.ஹரி கிருஷ்ணன், சென்னை

A.சரண்யா, M.Com

Dr.G.கீர்த்தி சௌஜன்யா, B.D.S., சென்னை

திரு.N.ராகவேந்திரன், சென்னை

திரு.B.முருகன், சோழவந்தான்

திரு.T.ரவி- குடந்தை

திரு.S.P.பாண்டியன், குடந்தை

திரு. G.S.சந்திரசேகர், HCL., சென்னை

வலைதள வடிவமைப்பு

திரு.பா.செந்தில் குமார்

சாயி பக்தி சேவகர்

திரு.சாயிநி மாதவராஜ்.G

உங்கள் கருத்துக்கள், சிந்தனைகள் மற்றும் விமர்சனங்களை அனுப்ப வேண்டிய முகவரி:-

V.ஸ்ரீராம்

எண்:93/34 K.H.ரோடு, 2வது மாடி, (SBI பேங்க் எதிரில்) அயனாவரம், சென்னை 600 023.

செல்: 8825831068, 9941816692



கர்மங்களை குறைத்துக் கொள்ள வழி..அதை தைரியமாக அனுபவிப்பதே, நீங்கள் எப்போதும் என்னை நினைத்துக் கொண்டிருந்தால் அதை அனுபவிக்கும் சக்தியை நான் கொடுக்கின்றேன். அது துன்பம் என்ற எண்ணம் உங்களில் ஏற்படாமல் நான் செய்கின்றேன்.

எவனொருவன் வெறுப்புகளை எல்லாம் தவிர்த்து எல்லா உயிர்களையும் சமமாகவும், அன்போடும் பார்க்கிறானோ அவன் எனக்கு மிகவும் நெருங்கியவன்.

உன்னுடைய கடந்த காலம் புண்ணியங்கள் நிறைய இருப்பதால்தான் இங்கு வந்திருக்கின்றாய். எவனொருவன் இந்த மசூதியில் காலடி எடுத்து வைக்கிறானோ அவனுக்கு இம்மையிலும், மறுமையிலும் எந்த கெடுதலும் ஏற்படாது. எனவே கவலையை விடு...

உன் வாழ்வில் இன்னல்கள் நீங்கி ஒளியாய் நான் வரப்போகிறேன்..

என் வருகைக்காக காத்திரு..

– ஷீரடி சாய்பாபா

ஆசிரியர் பக்கம்...

அன்பிற்கினிய சாய் சொந்தங்கள் அனைவருக்கும் வணக்கம்!



பாபாவின் ஆசீர்வாதத்தினால் மூன்றாம் இதழ்மூலம் உங்களை சந்திப்பதில் மகிழ்ச்சி...

10.06.2018 அன்று காலை 10 மணிக்கு விழா தொடங்கிற்று. சென்னையில் இருந்து சீரடிக்கு எட்டாவது முறையாக பாத யாத்திரை சென்று வந்தவருமான திரு.சந்திரமௌலி அவர்கள் 'சாயிமகராஜ் குருவை தேடி' இதழை வெளியிட திரு.சாய்சுந்தர் அவர்களும், திரு.ராமமூர்த்தி அவர்களும் இதழை பெற்றுக்கொண்டனர்.

திரு.சந்திரமௌலி அவர்கள் சீரடி நடைபயணத்தின் அனுபவங்களை சாய் பக்தர்களுடன் பகிர்ந்து கொண்டார். திரு.சாய்சுந்தர் அவர்களும் தனது அனுபவங்களை பகிர்ந்து கொண்டார்.

வரும் வியாழன் முதல் (14.6.2018) நமது 'சாயி மகராஜ் குருவை தேடி' பத்திரிகையின் சார்பாக, உடல் ஊனமுற்றோர், முதியோர், மனநிலை பாதிக்கபட்டோருக்காக அவர்கள் இருக்கும் இடம் தேடிச் சென்று அன்ன தான சேவை அளிக்க இருப்பதாக அறிவித்தோம்.

ஆனால் சாயி பகவானின் லீலை அன்று வேறு விதமாக இருந்தது. விழாவிற்கு வந்திருந்தோர் 70 நபர்களும் உண்டு முடித்தும் 50 நபர்களுக்கு உணவு மீதமிருந்தது. நாங்கள் சமைக்கச் சொன்னது 50 நபர்களுக்குத்தான்.

மீதமிருந்த உணவை 50 பொட்டலம் கட்டி அன்றே பசித்த வயிறுகள்



இருக்கும் இடம் தேடி அன்னதான சேவையை ஆரம்பித்து விட்டோம். தொடர்ந்து அன்ன சேவை தடையில்லாது நடைபெற சாயி மகராஜை பிராத்திக்கின்றோம்.

முதல் இதழில் வெளிவந்த குடந்தை சற்குரு மௌன குருசாமி அவர்களின் கட்டுரையை படித்துப் பார்த்துவிட்டு சுவாமிகளின் ஐந்தாம் தலைமுறையினர் சென்னை சைதாப்பேட்டையில் இருந்து என்னை தொடர்பு கொண்டு வாழ்த்து தெரிவித்தனர்.

மாதந்தோறும் உத்திரம் நட்சத்திரத்தன்று ஸ்ரீ மௌன குரு சுவாமிக்கு அபிஷேக ஆராதனை செய்வதாகவும், வந்து கலந்து கொள்ளுமாறு அழைத் திருந்தனர். 20.6.2018 அன்று நடந்த அபிஷேக ஆராதனையில் கலந்து கொண்டேன். திரு.முரளிதரன் அவர்கள் என்னை அன்போடு வரவேற்று பூஜையில் கலந்து கொள்ள வைத்து அன்னதானமும் செய்வித்து வழியனுப்பி வைத்தார். 'சாயி மகராஜ் குருவை தேடி' புத்தகத்தின் மூலமாக எனக்கு ஏற்படும் அனுபவங்களுக்கும், ஆன்மீக உறவுகளுக்கும் என் சற்குரு சாய் மகராஜ்க்கு நன்றியை சமர்பிக்கின்றேன்.

மாதந்தோறும் உத்திரம் நட்சத்திரத்தன்று நடக்கும் ஸ்ரீ மௌன குருசுவாமி பூஜையில் கலந்து கொண்டு அருள் பெறும்படி அனைத்து பக்தர்களையும் வேண்டுகின்றேன். நமது புத்தகத்தை படித்துவிட்டு திரு.முரளிதரன் மூலமாக 85 வயதானவரும், திருவாலங்காட்டில் பாபாவிற்கு ஆலயம் எழுப்பியவருமான திரு.பாலன் - சாந்தா தம்பதியினரை சந்திக்கும் வாய்ப்பு கிட்டியது. அவரை பற்றி அடுத்த இதழில் விரிவான ஒரு கட்டுரை எழுதுகிறேன்.

அதே போன்று புதுபெருங்களத்தூர் சாய் சித்தாஸ்ரமம் நடத்தி வரும் திரு.ஸ்ரீ விமலானந்த மகராஜ் அவர்களும் புத்தகத்தைப் பாராட்டி என்னை










SAI
RAM



சந்திக்க விரும்பினார்கள். பாபாவின் அனுக்கிரகத்துடன் நேரில் சென்று சந்தித்தேன். ஸாயி நாத பூஜா விதானம் என்று பாபாவின் பூஜா வழி முறைகளை புத்தகமாக தொகுத்தி ருக்கின்றார். விரும்பும் பாபா பக்தர்க ளுக்கு அவர்களின் இல்லங்களுக்கு சென்று ஸ்ரீ சீரடி சாயிநாத பூஜையை சிறப்புற செய்து தருகிறார்.

சென்ற இதழில் தவத்திரு ராமதாஸ் அண்ணாவின் நூற் றாண்டு சிறப்பிதழாக வெளியிட்டிருந்தோம். அண்ணாவின் பிள்ளைகள் பலரும் தொடர்பு கொண்டு வாழ்த்தி நன்றி தெரிவித்தனர். குடந்தை திரு.வினோத் சாய் அவர்கள் ஆர்வத்துடன் என் னைத் தேடி வந்து புத்தகத்தைப் பெற் றுச் சென்றது மகிழ்ச்சியாக இருந்தது.

திரு.மனோகரன் அவர்கள் சென் னையில் உள்ள பாபா ஆலயங்களை தரிசிப்பதற்கென மாதந்தோறும் ஒரு நாள் பயணத்தை தொடங்கியுள்ளார்.

முதல் பயணமாக கடந்த 22.6.2018 அன்று 23 நபர்களுடன் புறப்பட்டு வேலூர் நவக்கிரக பாபா ஆலயத்தில் இருந்து ஆரம்பித்தார். பாபாவின் ஆசீர்வாதத் தோடு,'சாயி என் வாழ்க்கை உன்னோடு தான்' புத்தகத் தின் ஆசிரியர் திரு.கி.சிவ நேசன் தலைமையில் முதல் பயணம் இனிதே நடந்தேறியது.

ஸ்ரீபுரம் மற்றும் விரிஞ் சிபுரம் சிவன் கோவிலும் பார்த்து விட்டு அன்று மாலை சிவன் கோவிலில் அனை வருக்கும் அடியேனால் தியானப்பயிற்சி வழங்கப்பட்டது. அனைவரும் மனத்திருப்தியுடன் இரவு 10 மணிக்கு சென்னை திரும்பினோம்.

அதே போன்று குருவருள் வேண்டி திரு.அசோக்குமார் அவர்கள் பாபாவின் அடியவர்களுக்கும், இறை சேவைகளுக்கும் காணிக்கை அளிப் பதில் அவருக்கு நிகர் அவரே. ஒரு முறை திரு.மாதவராஜ் அவர்களிடம் நான் திருவள்ளூர் ஸ்ரீராம் சாய்பாபா அறக்கட்டளைக்கு செல்வதாக கூற,

உடனே திரு.மாதவராஜ் அவர்கள் என்னிடம் ஒரு கவரை கொடுத்து இதை கோவில் நிறுவனர் திரு.சாய் பத்மா அவர்களிடம் கொடுத்து விடு மாறு கூறினார். கவரில் குரு அருள் வேண்டி அசோக்குமார் என்று எழுதி யிருந்தது. கவரில் ரூ.5000/- காணிக் கையிருந்தது. ஆட்களை பார்க்க வேண்டியதில்லை.

அவர் பாபாவிற்கு சேவை செய் கின்றார் என்று தெரிந்தால் போதும்.



உடனே அவர்களுக்கு அவர்கள் கேட்காமலேயே காணிக்கை அனுப்பி விடும் பெருந்தன்மையாளர் திரு.அசோக்குமார் அவர்கள்.

நமது சாயிமகாராஜ் குருவை தேடி இதழை, சாயி என் வாழ்க்கை உன்னோடுதான் ஆசிரியர் திரு.கி.சிவனேசன் அவர்கள் மூலமாக திரு.அசோக்குமார் அவர்களுக்கு கிடைத்திருக்கிறது.

புத்தகத்தை படித்தவர் திரு.மாதவராஜ் அவர்களை தொடர்பு கொண்டு சாயி மகராஜ் இதழுக்கு தட்சிணை அளிக்க வேண்டும் என்று கூறியிருக்கின்றார்.

திரு.மாதவராஜ் அவர்களும் தட்சிணையை நேரடியாக வங்கி கணக்கில் செலுத்திவிடுமாறு கூற திரு.அசோக்குமார் அவர்களும் உடனே ரூ.2000/- தட் சிணையை அளித்து வாழ்த்துக்கள் தெரிவித்திருக்கிறார்கள்.

பாபாவின் கருணைக்கும், குருஅருள் தேடி திரு.அசோக்குமார் அவர்களின் தயாள குணத்திற்கும் தானே ஒரு புத்தகம் நடத்தினாலும் பாபாவின் புகழ் பாடும் மற்ற பத்திரிக்கையும் வளர வேண்டும் என்ற பரந்த மனப்பான்மை உடைய திரு.கி.சிவனேசன் அவர்களுக்கும் நாங்கள் என்றென்றும் நன்றிக்கடன் பட்டிருக்கின்றோம்.

நமது பத்திரிக்கை வெளியீட்டு செய்தியை முகநூல் பக்கத்தில் வெளியிட்ட மறுநாளே என்னை சந்தித்து ஒவ்வொரு மாத இதழ் வளர்ச்சிக்கும் காணிக்கை அளித்து வரும் திரு.பா.செந்தில் குமார் அவர்களுக்கும், திரு.புவனா சுரேஷ் அவர்களும் அவர்தம் குடும்பத்தினர் அனைவருக்கும், பத்திரிகை சார்பாக மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

மனவளக்கலை மன்றத்தில் பயின்றபோது எனக்கு தீட்சை அளித்த திரு.சீத்தாராமன் அவர்களையும் சந்தித்து அவர்களின் வாழ்த்துக்களையும் பெற்றேன்.

மேலும் 'சாயி மகராஜ் குருவை தேடி' பத்திரிகையை படித்துவிட்டு தொலைபேசியிலும், நேரிலும் வாழ்த்திய அன்பு நெஞ்சங்கள் அனைவருக்கும் நன்றியை தெரிவித்துக் கொண்டு மீண்டும் அடுத்த இதழில் சந்திப்போம். ●

சாய் ராஜ யோகா

இயற்கை நலவாழ்வு மையம்

யோகா, பிராணாயாமம், தியானம், யோகா தெரபி



உடலும் உள்ளமும் ஆரோக்கியத்துடன் ஆனந்தமாய் வாழ அனைவருக்கும் எளிய மூச்சுப் பயிற்சி, ஆசனப் பயிற்சி, தியானப் பயிற்சி,குண்டலினி யோகி ஸ்ரீராம சாது அவர்களின்

குறுகிய கால பயிற்சி வகுப்புகள்

சாய் ராஜ யோகாவின் ஆனந்த கிரியா 1 நாள் பயிற்சி

வயிறு சம்பந்தப்பட்ட பிரட்சனைகள், கொழுப்புக் கட்டி, நீர்க்கட்டி, மாதவிடாய், குழந்தையின்மை, செரியாமை, சுறுசுறுப்பின்மை, மலச்சிக்கல், சளி தொந்தரவு, ஆஸ்துமா, வீசிங், மனசோர்வு, மூட்டுவலி, உடல்வலி ஞாபகமறதி நீங்கும் அற்புதப் பயிற்சி)

எளிய முறை யோக ஆசனப் பயிற்சி 2 நாள் பயிற்சி

நீரிழிவு, முதுகுவலி, உடல் பருமன், இதயநோய், ஒற்றை தலைவலி, ஆண்மைக்குறைவு, தூக்கமின்மை, மன அழுத்தம், ரத்த அழுத்தம், கண் நோய் தீர ஆசனப் பயிற்சி)

தன்னை உணர குண்டலினி யோக தியானம் 8 நாள் பயிற்சி

வாழ்க்கை வளத்தை, உடல் நலத்தை சரி செய்யும் யோகசக்கரங்கள், குண்டலினியின் இருப்பு, ஏறுபடி, இறங்குபடி, குண்டலினி யோகத்தின் மூலம் ஆத்மஞானம், பிரம்ம ஞானம் அடைவது இல்லற இன்பங்களை குறைவின்றி அனுபிவித்து இறையுணர்வோடு வாழ்தலைப் பற்றி ஞானம்)

மாதம் தோறும் முதல் ஞாயிற்றுக்கிழமை மௌனம், பயிற்சி நிகழும், அனைத்துப் பயிற்சிகளுக்கும், கட்டணங்களுக்கும் தொலைபேசியில் தொடர்பு கொண்டு விபரம் அறியவும்.

93/34, K.H.Road, 2nd Floor, Opp SBI Bank, Ayyanavaram, Chennai-23

9941816692, 8825831068

எல்லா உயிரும் நானே!

உன்னைத் தேடி வருகின்ற ஜீவராசிகள் எதுவாயினும் நானே! அனைத்து உயிர்களிடமும் அன்பு காட்டு என்கிறார் சாயி. இந்த ஒரு உபதேசத்தை மனிதர்கள் அனைவரும் கடைபிடித்தாலே உலகம் முழுமையாய் அமைதி நிலைக்கு திரும்பும்.

உபாசினி பாபா, பாபாவின் ஆணைப்படி கந்தோபா ஆலயத்தில் 1911ல் இருந்து தங்கியிருந்தார். ஓர்நாள் பாபாவிற்கு நிவேதனம் செய்வதற்காக பிரசாதம் தயார் செய்தார். அப்போது ஒரு கறுப்பு நாய் அவரருகே வந்து பிரசாதத்தையே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தது. உபாசினி அதை விரட்டிவிட்டு, பிரசாதத்தை எடுத்துக் கொண்டு துவாரகாமாயிக்குச் சென்றார்.

உபாசினியைக் கண்டவுடன் பாபா நான்தான் அங்கேயே இருந்தேனே, நீ ஏன் இதை இங்கே கொண்டு வந்தாய்? என்றார். அங்கே ஒரு கறுப்பு நாயைத் தவிர வேறு யாரும் வரவில்லையே, நீங்கள் எப்போது அங்கே வந்தீர்கள் என்று உபாசினி கூற "அந்த கறுப்பு நாய் நான்தான்.." என்று கூறிய பாபா பிரசாதத்தை ஏற்றுக் கொள்ள மறுத்துவிட்டார்.

மறுநாள் பிரசாதம் தயார் செய்யும் போது நாய் ஒன்றும் வரவில்லை. ஆனால் தாழ்த்தப்பட்டவன் ஒருவன் நோய் வாய்ப்பட்ட நிலையில் அருகே கிடந்த கல்லின் மீது அமர்ந்து பிரசாதத்தையே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தான். பிராமணரான உபாசினி அவனை விரட்டி விட்டு பிரசாதத்தை எடுத்துக் கொண்டு பாபாவிடம் வந்தார்.

உபாசினியை கண்டவுடன் பாபா, நேற்றும் எனக்கு உணவு அளிக்கவில்லை. இன்றும் என்னை துரத்தி விடுகிறாய், பின்பு எதற்கு பிரசாதத்தை இங்கு கொண்டு வருகிறாய் என்றார். உபாசினிக்கோ, வியப்பு, "என்ன நீங்கள் அங்கு இருந்தீர்களா.." என்றார்.

"ஆமாம் நான் அங்கு கல்லின் மீது அமர்ந்திருந்தேன். என்னை நீ சூத்திரன் என்று விரட்டி விட்டாயே.." என்றார்.

உபாசினிக்கு வியப்பு மேலிட, தாங்கள் அந்த மனிதனாக எப்படி இருக்க முடியும்.." என்று கேட்க,

பாபா, "ஆம்.. நான் எல்லா ஜீவன்களின் உள்ளேயும், வெளியேயும் இருக்கிறேன்.." என்றார்.

ஆன்மீகத்தின் சில எல்லைகளை தொட்ட சில பெரியவர்கள் கூட எல்லா உயிர்களிலும் இறைவன் இருக்கின்றான் என்பதை ஒப்புக் கொள்ள மறுக்கின்ற நிலையில் நம் சத்குரு சாயி தன்னை நாடி வந்த சாமானியர்களுக்குக் கூட கடவுள் எல்லா உயிர்களிலும் உறைகிறார் என்பதை உணர்ந்து தெளிய வேண்டும் என உணர்த்துகிறார்.

ஹன்ஸ்ராஜ் என்ற பக்தர் தீவிர ஆஸ்துமா நோயால் பாதிக்கப்பட்டிருந்தார். பாபா அவரை தயிரை தவிர்க்கும்படி கூறினார். ஆனால் ஹன்ஸ்ராஜ் தினம் தோறும் பகல் உணவில் தயிர் சேர்த்துக் கொள்ள தயிர் உறை ஊற்றி வைத்திருப்பார். ஒரு பூனை ஒவ்வொரு தினமும் அங்கு வந்து அந்த தயிரை சாப்பிட்டுவிட்டுச் சென்றுவிடும்.

கோபம் கொண்ட ஹன்ஸ்ராஜ் அந்த பூனையை ஓர் நாள் அடித்துவிட்டார். பின்னர் அவர் துவாரகாமாயி சென்ற போது கூட்டத்தின் முன் பாபா கூறினார். "முரட்டுப் பிடிவாதமும், அறிவு இல்லாதவனுமான ஒரு முரட்டு மனிதன் இருக்கின்றான்.

அவனை தயிர் சாப்பிடக் கூடாது என்று நான் கூறியதை மதிக்காமல் தினம் தயிர் உறை ஊற்றி தயார் செய்து வந்தான். அந்த தயிரை நான் ஒரு பூனை வடிவில் சென்று தினம் குடித்து வந்தேன். அவன் என்ன செய்தான் தெரியுமா? என் தோள் பட்டையில் பிரம்பால் அடித்துவிட்டான். இதோ பாருங்கள்.." என்று தன் தோள் பட்டையைக் காட்ட அங்கு பிரம்பால் அடிக்கப்பட்டதற்கு அடையாளமாக நீளமான ஒரு தழும்பு காணப்பட்டது.

கபர்தேவின் மனைவி நாள்தோறும் தன் கையாலேயே உணவு தயார் செய்து பாபாவிற்கு நைவேத்தியம் எடுத்துச் செல்வார். அவள் ஒரு நாள் தான் தங்கியிருக்கும் வீட்டிற்கே வந்து உணவு ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று பிரார்த்தனை செய்து கொண்டாள். பாபாவும் வருவதாக வாக்களித்தார். ஆனால் அவர் வரவில்லை.

கபர்தேவின் மனைவி பாபாவிற்கு பிரசாதம் தயார் செய்யும் போது அவள் அருகில் ஒரு நாய் வந்தது. அது ஒரு நோய்வாய்ப்பட்ட பெண் நாய். அது எங்கே பிரசாதத்தை அசிங்கப் படுத்திவிடுமோ என்று பயந்த அவள் அடுப்பில் இருந்து ஒரு கொள்ளிக் கட்டையை எடுத்து அதன் மீது வீச அந்நாய் ஓடிவிட்டது. அதன்பிறகு தானே மசூதிக்கு சென்று பாபாவை உணவருந்த வருமாறு அழைத்தாள்.

அதற்கு பாபா, "ஆமாம் நான் அங்கு வந்த போது என் மீது எரியும் கொள்ளிக்கட்டையை வீசினாய். இப்போது வந்து என்னை அழைக்



கின்றாய் போ.. போ..” என்றார்.

ஒரு சமயம் பாபா நானாவிடம் எனக்கு போளி வேண்டும் என்றார். நேரமாகிவிட்டதால் சமையல்காரர்கள் ஒருவரும் இருக்க மாட்டார்கள் என்றார் நானா. எனக்கு போளி கட்டாயம் வேண்டும். எப்படியாவது தயார் செய்து கொண்டு வா..” என்றார் பாபா.

நானாவும் மிகவும் சிரமப்பட்டு எட்டு போளிகளையும், வேறு சில பதார்த் தங்களையும் செய்து கொண்டு வந்தார்.

போளிகளை பாபாவின் முன் கொண்டு வந்து, “இந்தாருங்கள் நீங்கள் கேட்ட போளிகள்.. எடுத்துக் கொள்ளுங்கள்..” என்றார்.

பாபா சற்று நேரம் தன் முன் வைக்கப்பட்ட போளிகளையே அமைதி யாக பார்த்துக் கொண்டிருந்தார். சற்று நேரத்தில் அந்த நைவேந்தியத்தில் எறும்புகளும், ஈக்களும் மொய்க்கத் தொடங்கின. சிறிது நேரம் கழித்து, “நல்லது இந்த தட்டுகளை எடுத்துச் செல்..” என்று நானாவிடம் பாபா கூற, நானாவோ, “என்ன பாபா விளையாடுகிறீர்களா.. நான் கஷ்டப் பட்டு செய்து வந்ததை கொஞ்சம் கூட சாப்பிடாமல் எடுத்துப் போ என் கிறீர்களே, நீங்கள் கொஞ்சமாவது சாப்பிடாவிட்டால் நானும் சாப்பிட மாட்டேன்..” என்றார்.

அதற்கு பாபா, “நான் சாப்பிட்டு விட்டேன் நானா.. நீயும் சாப்பிடு..” என்றார்.

“தாங்கள் சாப்பிட்டீர்களா..? என்ன பாபா சிறுவர்களிடம் கூறுவது போல் கூறுகிறீர்களே, நான் எடுத்து வந்த பதார்த்தங்கள் அப்படியே இருக்கும் போது நீங்கள் எதை சாப்பிட்டீர்கள்.. நீங்கள் சாப்பிடாமல் நானும் சாப்பிட மாட்டேன்..” என்று பாபாவிடம் கோபித்துக் கொண்டு சாவடிக்குச் சென்று படுத்துக் கொண்டார் நானா.

பக்தன் வருந்துவதை தாளாத பாபா, அவரை அழைத்துவரச் சொல்லி பிடிவாதம் செய்யாமல் சாப்பிடு..” என்று கூற நானா மறுபடியும் கோபித் துக் கொண்டு சென்றுவிட, சற்று நேரம் பொறுத்து திரும்ப அவரை அழைத்து வரச் சொல்லி பாபா கூறினார்.

“நானா 18 வருடங்களாக என்னுடன் இருக்கிறாய். நீ என்னை புரிந்து கொண்டது இவ்வளவுதானா! நீ என்னிடம் கற்றது இவ்வளவுதானா.. என்னைப் பற்றிய உன் மதிப்பு இவ் வளவுதானா.. பாபா என்றால் இந்த எட்டு முழ உடல் மட்டும்தான் என்று நினைக்கிறாயா..? நான் எறும்பு, ஈக்கள் வடிவிலும் உண்கிறேன். எனக்கு எந்த உருவம் தோன்றுகிறதோ, அந்த உருவத்தை எடுத்து அதன் மூலம் சாப்பிடுகிறேன்.

நீ எடுத்து வந்த போளியை வெகுநேரத்துக்கு முன்பே நான் சாப் பிட்டு விட்டேன். நான் அனைத்து உயிர்களுக்குள்ளேயும் இருக்கின்றேன். அதைப் புரிந்து கொள்ள முடியாத உன் சிறுமதியை விலக்கி என்னை ஞானக் கண்ணோட்டத்துடன் பார். நீ நினைப்பது போல் நான் இங்கு எட்டு முழ உடலில் சிறைப்பட்டவனல்ல.

நான் இங்கு சர்வாந்தர்மியாக உள்ளேன். நான் துவாரகாமாயில் அமர்ந்தவாறே எங்கோ இருக்கும் பக்தர்களின் மனதில் எழும் எண் ணங்களை உணர்ந்து கொண்டு அவர்களை என்னிடம் வரவழைத்து அன்பையும் அருளையும் பொழிந்து ஆட்கொள்கிறேன்..” என்றார்.

நானா விளங்கியவாறு தட்டுக்களை எடுத்துச் சென்று சாப்பிடலானார்.

சாயியை பணிவோம்..

சகல வரமும் பெறுவோம்.. ●

தொடர் –3:

குருவைத் தேடி


குருவை காட்டிலும் அதிகமான தத்துவம் இல்லை. குருவைக் காட்டி லும் அதிகமான தவம் இல்லை. குருவைக் காட்டிலும் அதிகமான ஞானமும் இல்லை. அந்த குருவிற்கு நமஸ்காரம்.

குருவைத் தேடுவதற்கு முன்பாக குரு ஒருவனுக்கு அவசியம்தானா? எந்த விதத்தில்? என்ற வினா எழுவது இயல்பே, ஒரு சிலர் தேவை என்பர். மற்றும் சிலரோ தேவையில்லை என்ப தாகவே இருக்கும். இவ்விவாதங்கள் நம்மை கோபமூட்டி அமைதியை இழக்கச் செய்யும்.

சாய் சத்சரிதம் எழுதிய அண்ணா சாகேப் தபோல்கர் முதன்முறையாக சீரடிக்கு வந்த சம்பவம் ஒரு சிறந்த எடுத்துக் காட்டு. அண்ணா சாகேப் அவர்கள் பாபாவை பார்க்க சீரடி வந்து காத்துக் கொண்டிருந்த நேரத்தில் அங்கிருந்தவர்களுடன் சுமார் ஒரு மணி நேரத்திற்கு மேலாக குரு என்பவர் நம் முன்னேற்றத்திற்கு தேவையில்லாத ஒரு தடை என வாதம் செய்தார். அதற்கு ஆதாரமாக பகவத் கீதையில் இருந்தெல்லாம் ஆதாரத்தை எடுத்து வைத்தார்.

பாலா சாகேப் இவ்வாதத்தை எதிர்த் தார். விதி வலியது. எல்லோருக்குமே குரு தேவை என்பது அவரின் அழுத்த மான கருத்தாக இருந்தது. மனம் சஞ் சலத்தில் இருப்பதால் அண்ணா சாகேப் பரமகுருவான சாய்பாபாவை தரிசிக்கும் தகுதியை இழந்துவிட்டதாக வாதிட்டார்.

அதன் பின்பு அனைவரும் பாபாவின்



தரிசனத்திற்கு துவாரகாமயிக்கு சென்றனர். பாபா, அண்ணா சாகேப்பை பார்த்து, "காலையில் வாடாவில் எதைப் பற்றி தீவிரமாக வாதம் செய்து கொண்டிருந்தீர்கள்." என்றார். அப்போதுதான் அண்ணா சாகேப்பிற்கு பாபாவின் அந்தர் ஞானம் புலப்பட்டது. பிறகு பாபா சாவடியில் நடந்தது அனைத் தையும் நேரில் கண்டது போல் அண்ணா சாகேப் மீது கோபமில்லாது கருணையோடு கூறினார்.

உடனடியாக தன் தவறுக்காக மனவருத்தம் அடைந்து பாபாவிடம் முழுமையாக சரணடைந்தார் அண்ணாசாகேப். பாபாவின் எண்ணங்களெல்லாம் அளவிட முடியாத மாபெரும் சக்தி எனவும், அவர் முன் நாம் ஒன்றுமே இல்லை எனவும் தமது அறிவுப் பூர்வமான தர்க்கத்தையும், சுதந்திரம் என்ற எண்ணத்தையும் கைவிட வேண்டும் எனவும் உணர்ந்து கொண்டார்.

இவ்விதமாக குரு தேவையில்லை என்று வாதிட்டவர் பாபாவின் தீவிர சீடரானார். அறிவினால் ஆராய்ந்து சுயமாக முடிவெடுப்பதே சரியான வழி என அவர் கருதிய போதும் காலம் அவரை தன் வழியில் இழுத்துக் கொண்டது. அனைத்து சாஸ்திரங்களும் கூட குரு இல்லாமல் பிரம்மவித்தை கைகூடாது என தெளிவாகவும், முடிவாகவும் கூறுகின்றன.

பொதுவாக குரு அவசியமா என்று கேள்வி எழுப்புகின்றவர்கள், இன்னும் சீடர்களாகத் தகுதி பெறாதவர்கள். அதாவது இன்னும் அவர்களிடம் பணிவு, பொறுமை, மரியாதை, கிரகிக்கும் தன்மை, சகிப்புத் தன்மை வரவில்லை என்று பொருள்.

இப்படிப்பட்டவர்களே சத்சங்கத்தை நாடவேண்டும். ஏனைய பக்தர்களுடன் பழகி அவர்களுடன் பக்தி, சேவை போன்றவற்றில் பயிற்சி பெற்று தகுதி பெற வேண்டும். ஓரளவு தகுதி பெற்றுவிட்டால் தங்கள் குருவை அடைந்து விடுவார்கள்.

குருவைத் தேடி எப்போதும் சீடர்கள்தான் செல்ல வேண்டும் என்ற அவசியம் கிடையாது. சீடனாவதற்கு உண்டான தகுதியை வளர்த்துக் கொண்டவர்களை நோக்கி குருவே வந்துவிடுவார்.

நல்ல குருவை அடைவதற்கு முன் அவருக்கு காணிக்கையாக இரண்டு நயா பைசாக்களை தயாராக வைத்திருங்கள். என்ன இரண்டு பைசாக்கள். பாபாவே கூறுகிறார்.

எனக்கு ஒரு குரு இருந்தார். அவர் பெரிய மகான். கருணையுள்ளம் படைத்தவர். நீண்ட காலம் அவருக்கு சேவை செய்து வந்தேன். ஒரு கணமும் அவரைவிட்டு பிரிந்ததில்லை.அவருடனேயே இருந்து எப்படியாவது உபதேசம் பெற்றுவிட ஆவலாய் இருந்தேன்.

என் குருவினுடைய வழியே அலாதியானது. தலையை மொட்டையடித்துக் கொண்டு வரச்சொல்லி என்னிடம் இரண்டு பைசாக்கள் தட்சிணை கேட்டார். அவர் கேட்டது செப்பு நாணயங்களை அல்ல.

நா...நயங்கள். நாக்கில் இருந்து வெளிவரும் உறுதிமொழியான வார்த்தைகள் ஒன்று நிஷ்டை, அதாவது பொறுமை. மற்றொன்று ஸபூரி, அதாவது பொறுமை. இரண்டையும் அவரிடம் நான் அர்ப்பணித்தேன். அவர் மிகவும் மகிழ்ச்சியடைந்தார்.

பன்னிரெண்டு ஆண்டுகள் இடையறாது குருசேவை செய்து வந்தேன். அவரே என்னை வளர்த்து வந்தார். ஆகாரத்திற்கோ, உடைக்கோ,



எனக்கு ஒரு போதும் குறைவில்லை. அவருடைய அன்பை விவரிக்க வார்த்தைகளே கிடையாது. அம்மாதிரி ஒரு குரு கிடைப்பது மிக அரிது.

பசி, தாகம் என்ற நினைவே இல்லாது அன்பு பொங்கும் குருநாத ருடைய முகத்தையே பார்த்துக் கொண்டிருப்பேன். அவர் இல்லாவிட்டால் என் மன அமைதி பாதிக்கப்பட்டுவிடும். சதா அவருடைய தியானமே. வேறு எதையும் எண் ணுவதில்லை. திடமாக என் மனம் அவரிடமே லயித்திருந்தது. இதுவே 'நிஷ்டா' அதாவது குருவிற்கு சமர்ப்பிக் கப்பட்ட முதல் பைசா.

நீண்ட காலம் மனதை தளர விடாமல் வைராக்கியத்துடன் குருவுக்கு சேவை செய்து வந்தேன் அல்லவா. அதுவே 'ஸபூரி' இரண்டாவது பைசா. மனிதனிடம் இயற்கையாகவே இருக்க வேண்டிய மனிதத் தன்மையே ஸபூரி. இது சம்சாரத்தைக் கடக்க வைக்கும். இன்னல்களை நீக்கும். பாபங்களை அறவே அழிக்கும். வாழ்க்கையின் லட்சியத்தை அடையச் செய்யும்.

நிஷ்டா, ஸபூரியை தவிர என் குருநாதர் எனக்கு வேறு எதையும் கற்றுத் தரவில்லை. வேறு எந்த மந்திரங்களையும் உபதேசிக்கவில்லை.

குருவிடம் மந்திரமோ, உபதேச மா பெற வேண்டிய அவசியமில்லை. அவரையே உனது எண்ணங்கள், செயல்கள் யாவற்றிற்கும் இலட்சியமாக கொள். ஆன்மீக வாழ்வின் லட்சியமான பரமார்த்தம் உனக்கு நிச்சயமாக கிட்டும். நானும் இதையே செய்தேன்.

நீயும் அதையே செய். இந்த துவாரகாமாயில் அமர்ந்து நான் பேசுவது சத்தியம். சாஸ்திரங்களில் தேர்ச்சியோ, உடலை வாட்டும் சாதனைகளோ தேவையில்லை. உன்னுடைய குருவினிடம் திடமான நம்பிக்கை ஒன்றே போதும். எல்லா காரியங்களையும் இயக்குபவர் குருவே என்பதை திடமாக நம்பு.

குருவே பிரம்மா, விஷ்ணு, சிவன் ஆகிய திரிமூர்த்தி என்பதை உணர்ந்தவனின் பாக்கியத்தை என்னவென்று உரைப்பது.

(தொடரும்..)



வள்ளல் பெருமானின் ஜோதி தரிசனம்

வள்ளலார் என்ற புரட்சித் துறவி செய்த புதுமைகள் பல. அவர் மடத்தை சங்கமாக்கினார். சத்திரத்தை தர்ம சாலையாக்கினார். கோவிலை ஞான சபை யாக்கினார். முதல் திருக்குறள் வகுப்பு, முதல் முதியோர் கல்வி, முதல் மும்மொழி பாடசாலை, முதல் ஆன்மீகக் கொடி, முதல்

முதலில் ஜோதி வழிபாடு செய்தது ராமலிங்க அடிகளாரே. இவருக்கு முன் தோன்றிய அருளாளர்கள் இறைவனை ஒளிவடிவமாக கண்டனர். ஆயினும் வழிபாடாக மாற்றியது வள்ளல் பெருமானே!

"உணர்தர்க்கரிய தோர் ஜோதியானவன்" என்று நாவுக்கரசரும்

"அறிவரிய ஜோதியனே" என்று சுந்தரரும்,

"ஆதியும் அந்தமும் இல்லா அருட்பெரும் ஜோதியே" என்று மாணிக்கவாசகப் பெருமானும்,

"நந்தா ஜோதி" என்று பட்டினத்தடிகளும், "பேரொளியாய் பெருஞ்சுடராய்" என்று திருமூலரும், ஜோதியைப் பாடிப் பரவுகின்றனர்.

ஆயினும் வள்ளல் பெருமானின் ஜோதியில் ஒரு புதுமை உண்டு. அவர் தனது நெற்றி புருவ இடை வெளியாகிய சிற்றம்பலத்தில் தன் ஆன்மாவையே ஜோதியாகக் கண்டார். அந்த ஆன்மா அணுவிலும் சிறியது. ஆனால் உயிரை இயக்குவது. அழியாத கோடி சூரிய பிரகாசத்தை உடையது.

இந்த ஆன்ம ஒளியே பெருமானை வழி நடத்திற்று. இம்மனசாட்சியின் ஆட்சியில் மனிதம் புனிதம் ஆனது, சத்தியம் நிலைத்தது. சமரசம் தோன்றியது. அருள் பிறந்தது. கருணையால் உலகம் மகிழ்ந்தது.

இந்த வழிகாட்டு தலே இன்றைய மானுடத்திற்கு தேவை. இவை இருந்தால் மனிதன் தெய்வமாகலாம்.**"தான் பெற்ற இன்பம் பெருக இவ் வையகம்"** என வள்ளல் பெருமான் தான் கண்ட ஜோதியை அகல் விளக் காக்கி ஞான சபையில் வைத்தார். அவ்விளக்கின் முன் மனத்தூய்மையை காண்பிக்கும் தூசு நிங்கிய கண்ணாடி யை வைத்தார். கண்ணாடி வழி வரும் ஒளி ஜோதியாயிற்று.

ஜோதிக்கு முன் தீய குணங்களை பிரதிபலிக்கும் ஏழு திரைகளை வைத்தார். இத்திரைகளாகிய தீய குணங் களை நீக்கினால் இறைவன் ஜோதியில் காட்சியளிப்பார் என் பதை மக்களுக்கு சூசகமாய் கூறினார். இந்த ஜோதி தரிசனமே தற்போதைய தேவை.

மனத்தூய்மையும், தீய குணங் களையும் நீக்கிய மனிதன் தன் ஜீவகாருண்யச் செயல்களால் இறை நிலையை அடைய வேண்டும் என்ற அத்வைத கேட்பாடே வள்ளல் பெரு மானின் கோட்பாடு. சிதம்பரத்தில் சுத்த வெளியைப் பிரதிபலிக்கும் "சிதம்பர ரகசியம்" என்ற இருட்டறை உண்டு. ஆனால் வள்ளல் பெருமானோ அவ்விருட்டு அறையில் ஒளித் தெய்வத்தை வைத்தார்.

அன்பின் முதிர்ச்சியான அருள் தெய்வத்தை அறிவு ஜோதியாக காட்டி மனிதர்களின் அறியாமையை விரட்டினார். அந்த ஒளி உலக மக்களுக்குள் அன்பாக, அறிவாக, கருணையாக பரவ வேண்டும்.

தமிழர்களுக்கும், ஒளி வழிபாட்டிற்கும் நெருங்கியத் தொடர்பு உண்டு. இயற்கையை தெய்வமாக வணங்கிய தமிழினம்,

ஞாயிறு போற்றுதும் ஞாயிறு போற்றுதும்" என இசைக்கும். தை பிறந்தால் தமிழர் வாழ்வில் வழி பிறக்கும். ஒளித் தெய்வமும் அவர்களை அழைக்கும்.

பழனியை நோக்கி நடை பயணம். சபரிமலை யை நோக்கி மகரஜோதி பயணம், உடலூரை நோக்கி தைபூச நடை பயணம் என சாரை சாரை யாய் மக்கள் சாலையில் செல்வதை பார்க்கலாம்.

வானத்து நட்சத்திரங்களில் மிகுந்த ஒளியுடையது கார்த்திகை, பூசம், விசாகம். இம்மூன்றும் தமிழரின் குறிஞ்சி நிலக் கடவுளான முருகனுக்கு உரியவை. முருகனை தமிழர்கள் ஒளிக்கடவுளாக வழிபடுகின்றனர்.

சிவனின் கைகளில் உள்ள அக்கினிச் சட்டியும், ஒளியும், திருமாலின் கைகளில் உள்ள சக்கர ஒளியும், மாரியம்மனின் அக்கினி சட்டி ஒளியும், தமிழரின் ஒளி வழிபாட்டை சுட்டிக் காட்டும்.

தமிழரின் சைவ சமயத்தின் உச்சியில் நின்று போதித்து ஒளியுடல் பெற்று அத்வைத ஞானத்தால் கடவுள் மயமான வள்ளல்பெருமானின் **"அருட்பெரும் ஜோதியும்"** ஒளித் தத்துவத்தில் எழுந்ததே! அதனை உணர்ந்து வள்ளல் பெருமானின் ஒளி வழி சென்று வீடுபேறு அடைவதே நமது லட்சியமாகக் கொள்வோம்.

அருட்பெரும் ஜோதி! அருட்பெரும் ஜோதி!

தனிப்பெரும் கருணை! !

விளம்பரங்கள் வரவேற்கப்படுகின்றன

அன்பான சாயி சொந்தங்களே...உங்களது நிறுவனங்கள், கடைகள், தொடர்பான விளம்பரங்களை பிரசுரித்து பயனடையலாம்.



முழுபக்க விளம்பரம் கறுப்பு / வெள்ளை ரூ.2000

அரைபக்க விளம்பரம் கறுப்பு / வெள்ளை ரூ.1000

முன் பின் அட்டை உள்பக்கம் கலர் ரூ.3000

பின் அட்டை கலர் ரூ.4000

ஒருவருக்கு மற்றொருவர் மேல் உண்டாகும் வெறுப்பு பகை உணர்ச்சியை முழு சத்தியுடன் வெளியிடுவது கோபம். இது அநாகரிகமானது. இருப்பினும் சில நேரங்களில் இது அவசியமாகிறது. நம் எண்ணங்கள் நிறைவேற இடையூறுகள் ஏற்படும் போதும் கோபத்தை வெளிக்காட்ட அவசியமாகிறது.

ராவணன் நிராயுதபாணியாக நின்ற சமயம் ராமனுடைய இயல்பான கருணை என்னும் குணம் அக்கோபத்தை புறந் தள்ளி '**இன்று போய் நாளை வா**' என

பாபாவின் கோபம்

இராவணனைக் கொல்லாமல் திருப்பி அனுப்பியது. இதே போல் பக்தர்களின் நலன்களுக்கு பாதகம் விளைவிக்கும் சக்திகள் எழும்போது பாபாவும் கோபத்தை வெளிப்படுத்தியிருக்கிறார்.

அது போன்ற சமயங்களில், மகல் சாபதி, நார்கே போன்ற பாபாவின் பக்தர்கள் கூட, பாபா விற்கு பித்து பிடித்து விட்டதோ என்று கூட நினைக்க வேண்டி யிருந்தது. ஒருவன் கோபவசப்படும் போது கண்முன் நடப்பதே தெரிவதில்லை. ஆனால் பாபா தன் முன் நிற்கும் பக் தனின் மனதில் எழும் எண்ணத்தையும் அறிகிறார். இது ஒரு விசேஷமான தன்மை. பல நேரங்களில் தான் கோபமாக இருக்கும் நேரங்களில் தன் முன் பக்தர்கள் வந்தால் பாபா உடனே அமைதியடைந்து அவர்க ளுக்கு அருள் பாலிப்பார்.

அவரே ஒருவன் வாழ்க்கையின் இலட்சியமான சாந்தியைப் பெற கோபத்தை அடக்க வேண்டும் என்றும் உபதேசிக்கிறார்.

புரந்தரே எனும் பக்தரிடம் பாபா கூறு கிறார். யாராவது உன்னை அவமதித்தாலோ, அவதூறாக பேசினாலோ உபத்திரவம் செய்தாலோ, அவனுடன் சண்டை செய் யாதே! அதை உன்னால் பொறுக்க முடி யாமல் போனால் ஒன்றிரண்டு பணிவான வார்த்தைகளில் பதிலளித்துவிட்டு அவ்வி டத்தை விட்டு அகன்றுவிடு.

சண்டை செய்து பழிக்குப்பழி வாங்கக் கூடாது. நீ மற்றொருவருடன் சண்டை


செய்யும் போது நான் வெறுப்படைகிறேன்.

ஒருவன் உன்னிடம் பத்து வார்த்தைகள் பேசினால் நீ ஒரே வார்த்தையில் பதில் சொல்ல வேண்டும். அதுவும் அவசியம் ஏற்பட்டால். அதுவன்றி யாருடனும் நீ சண்டை செய்தல் கூடாது.ஒருவன் மற் றொருவனிடம் கோபத்தை வெளியிடும் போது என் மனம் நொந்து போகிறது.

ஒருவன் மற்றொருவனை அவதூறாக பேசினால் நான் வருந்துகிறேன். ஒருவன் மற்றொருவனின் அவதூறுகளை திட மனதுடன் சகித்துக் கொள்வானேயானால் நான் மிக்க மகிழச்சியடைகிறேன். ஒரு பக்தர் இன்னொருவரைப் பற்றி அவர் இல்லாத சமயத்தில் தவறாக பேசிக் கொண்டிருந்தார். அந்த பக்தரை பாபா லெண்டித் தோட்டத்திற்கு கூட்டிச் சென்றார். அங்கே திரிந்து கொண்டிருந்த பன்றிகளை காட்டி, "அங்கே என்ன காண்கிறாய்" என் றார். "ஒரு பன்றி மலத்தை தின்று கொண் டிருக்கின்றது" என்று பதில் அளித்தார் பக்தர்.

பாபா கூறுகிறார், "எவ்வளவு ஆர்வத் துடன் அந்த பன்றி மலத்தை விழுங்கிக் கொண்டிருக்கிறது பார்த்தாயா. மனிதன் கழித்த மலத்தை உண்பதில் அதற்கு அவ்வளவு மகிழ்ச்சி. ஆனால் அது நம் கண்களுக்கு அருவருப்பாக இருக்கின்றது. இதுவே உனது நடத்தை.

தன்னுடைய சகோதரர்கள், உறவினர், வேண்டியவர்களை பார்த்து குறை கண்டு மக்கள் திருப்தியடையும் வரை வசைமாரி பொழிகின்றனர். எத்தனையோ புண்ணியம் செய்ததின் பலன் ஒருவன் மனிதனாகப் பிறக்கின்றான். நீ சீரடிக்கு வந்துமா இம் மாதிரியான செயலில் ஈடுபட வேண்டும்.



ஒருவரிடமும் குறை காணாதே! உன்னிடமுள்ள குறைகளையே ஆராய்ந்து பார். இப்படிச் செய்வதால் இவ்வுலகம் முழுவதும் உன் வசமாகும்." என்றார்.

மற்றொரு நாள் பாபா வின் அனுமதி இல்லா மலேயே துவாரகாமாயிக்கு முன்பாக ஒரு கொட்டகை அமைக்கும் பணியில் ஈடுபடுகின்றனர். பாபா சாவடிக்கு தூங்கச் சென்ற

வுடன் இங்கு வேலை ஆரம்பம் ஆகும். கால்களை நடுவதற்காக துவாரகாமாயி சுவற்றில் ஓட்டை போட்டு இரும்பு கம்பி களை பதித்து விட்டனர்.

காலையில் வந்து பார்த்த பாபாவிற்கு கோபம் தலைக்கேறியது. இரவெல்லாம் சிரமப்பட்டு பதித்த இரும்பு குழாய்களை தன் கைகளாலேயே பிடுங்கி எறிந்து விடுகிறார்.


பாபாவின் கோபத்திற்கு காரணம் தான் தாயாக நினைக்கும், சின்ன சிதிலமான கட்டிடமான துவாரகாமாயிலேயே எளிமை யாக வசிக்க நினைக்கிறார். இதை நமக்கு வரும் கோபத்தோடு ஒப்பிட முடியுமா? வசதி வாய்ப்புகள் கிட்டவில்லையே என்ற கோபம்தான் நமக்கு வரும்.

சியாமாவை ஒருமுறை பாம்பு கடித்து விட்டது. சியாமா வைத்தியர் தேவை யில்லை. எனக்கு வைத்தியர் சாய் ராஜாவே என்று பாபாவை தேடி ஓடி வந்து மசூதியில் ஏறும் சமயம், பாபா கோபமாக கத்துகிறார். "ஏறாதே மசூதியின் படிகளில் ஏறாதே, நீ சுத்த பிராமணன் என்றால் என் மசூதியின் படிகளில் ஏறாதே! திரும்பி போ, போய்விடு" என்று கோபித்துக் கொள்கிறார்.

சியாமா பயந்துவிட்டார். எல்லாமே பாபாதான் என்று ஓடிவந்ததற்கு பாபா கொடுக்கும் பரிசா இது என்று பயந்த சியாமா, இனி நான் எங்கு போவேன் என்று பயந்து நடுங்கியபடி கீழேயே நின்றுவிட்டார்.

சிறிது நேரத்திற்குப் பின்பு கோபம் தணிந்தவராக "மேலே வா சியாமா, இறைவன் அன்பானவன், நீ குணமடை வாய்" என்று அன்போடு ஆசீர்வதிக்கிறார்.

பாபா காட்டிய கோபம் தன் மீதன்று



தன் உடலில் கலந்துவிட்ட விசத்தின் மீது என்று பிற்பாடு சியாமா உணர்ந்து கொள் கிறார்.

உயிரற்ற சடப்பொருள்கள் கூட பாபா வின் சொற்களுக்கு கட்டுப்படுகின்றன என்ற விந்தையை பாபாவின் சத்சரிதத்தில் நாம் பல இடங்களில் வாசிக்கிறோம்.

லட்சம் பிறவிகள் எடுத்தாலும் இந்நிலை நமக்கு கிட்டுமா? எனவே பாபாவிற்கு வரும் கோபம், காரியக்கார கோபம். பக்தர்களுக்கு நன்மை செய்வதற்கு மட்டுமே வரும் கோபம். எனவே நினைவில் கொள்ளுங்கள். தவறியும் கூட அவரின் நிஜமான கோபத்திற்கு நாம் ஆளாகக் கூடாது.

கடவுளின் கோபத்தில் இருந்து நம்மை குரு காப்பாற்றுவார். குருவின் கோபத்தில் இருந்து கடவுளாலும் நம்மை காப்பாற்ற இயலாது.

சச்சிதானந்த சற்குரு காலடி பணிவோம்!
சகல நன்மைகளும் பெறுவோம்!!

பக்தி

– ரம்யா முருகதாஸ்

எனது பெயர் ரம்யா. நான் பிறந்தது, வளர்ந்தது, எல்லாம் பட்டுக்கோட்டை அருகில் உள்ள ஆலடிக்குமுளை என்ற கிராமம். தற்போது சென்னை அயனாவரத்தில் வசித்து வருகிறோம். எங்கள் வாழ்க்கையில் பாபா எப்படி வந்தார் என்பதை உங்களுடன் பகிர்ந்து கொள்வதில் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன்.

எனக்கு ஒரு நல்ல வாழ்க்கையை அமைத்துக் கொடுக்க வேண்டிய நேரத்தில் என் தாயும், தந்தையும் என்னை தனியாக தவிக்க விட்டு இறந்து போனார்கள். நான் நர்சிங் படித்தி



லீலாமிர்தம்

ருந்ததினால் நானும் என் கணவரும் சென்னைக்கு குடி பெயர்ந்தோம்.

வேலைச் சுமை ஒரு புறம், மனச் சுமை மறுபுறம் என்னை அழுத்த மிகுந்த மன உளைச்சலுக்கு ஆளாகி இருந்த நேரம். என்னுடன் வேலை செய்து கொண்டிருந்த திருமதி.லஷ்மி மோகன் அவர்கள் என் மீது அன்பாகவும், அனு சரணையாகவும், பல நேரங்களில் நல்ல வழிகாட்டியாகவும் இருந்தார்.

நான் மிகுந்த துயரத்தில் இருக்கும் போதெல்லாம் எனக்கு அறிவுரைகள் வழங்குவார். அப்படித்தான் ஓர்நாள் "உனக்கு சாய்பாபாவைத் தெரியுமா?" என்று கேட்டார்.

"எனக்கு தெரியாது மேடம்" என் றேன்.

"சரி, பரவாயில்லை, இனிமேல் தெரிந்து கொள். அவர் மிகப் பெரிய மகான். உன் துன்பங்களுக்கு அவர்தான் வழிகாட்ட முடியும். அவர் மிகவும் சக்தி வாய்ந்தவர். அவரிடம் நாம் மனம் விட்டு பிரார்த்தனை செய்தால் அது உடனே நடக்கும்" என்றார்.

எனக்கு இருந்த மன அழுத்தத்தில் யாரைப் பற்றியும் தெரிந்து கொள்ளும் மன நிலையில் அப்போது நான் இல்லை. இருப்பினும் திருமதி லஷ்மி மோகன் அவர்களின் மீது இருந்த மரியாதையால் "சரி மேடம்" என்றேன்.

அதன் பிறகு சிறிது நாள் கழித்து பாபாவின் புகைப்படம் ஒன்றைக் காட்டி இவர்தான் பாபா என்றார். அப்படியா என்று ஆச்சர்யத்தோடு பார்த்த நான் ஏதோ ஓர் உணர்வில் இந்தப் போட்டோவை எனக்கு தாருங்கள் என்றேன். அதற்கு அவர் என்னிடத்தில் இது ஒன்றுதான் உள்ளது. உனக்கு நான் வேறு ஒன்று வாங்கித் தருகிறேன் என்றார். நான் சரி என்றேன்.

பின்பு அவரே மயிலாப்பூரில் சாய்பாபா கோவில் உள்ளது. நீ ஒரு தடவை போய்விட்டு வா என்றார். சரி என்று நானும் என் கணவரும் மயிலாப்பூர் பாபா கோவில் சென்று வணங்கிவிட்டு வெளியில் வரும்போது ஒரு அம்மா என்னிடம் பாபாவின் புத்தகம் ஒன்றைக் கொடுத்தார்.

புத்தகத்தை வாங்கிக் கொண்ட நான் எதற்காக இதை தருகின்றீர்கள் எனக் கேட்டேன். அதற்கு அவர் ஒன்பது வாரங்கள் விரதம் இருந்து முடித்த உடன் ஏதாவது ஒரு தானம் செய்யணும். அப்படி செய்தால் நாம் நினைத்ததை பாபா நடத்திக் கொடுப்பார் என்று சொல்லிச் சென்றார்.

அதன் பின்பு நானும் அதுபோலவே ஒன்பது வாரங்கள் விரதமிருந்து தானம் செய்தேன். எனது மன அழுத் தம் பாபா பக்தியால் சற்றே திசை திரும்பியது. வாழ்வில் நம்பிக்கை துளிர் விட ஆரம்பித்தது. இவ்வாறாக

நாட்கள் நகர ஒரு நாள் எனது தோழி ரேகா என்பவரிடம் மயிலாப்பூர் பாபா கோவிலுக்கு போகலாம் வருகிறீர்களா என்றேன். அதற்கு அவர் நீ பாபா கோவிலுக்குத்தானே போகணும்.

வா, நான் கூட்டிச் செல்கின்றேன் என்று கூறி அயனாவரத்திலேயே இருக்கும் பாபா சென்டருக்கு கூட்டிச் சென்றார். அங்கு பாபாவை பற்றி சத்சங்கம் நிகழ்ந்து கொண்டிருந்தது. பாபாவை வணங்கிய பின் என் தோழி திரு. ஸ்ரீராம் அவர்களை அறிமுகம் செய்து வைத்தார்.

இவர்தான் எங்கள் குருநாதர் என்றார். அதன் பின்பு வியாழன் தோறும் அங்கு செல்ல ஆரம்பித்தேன். அங்கு சென்ற பின்புதான் பாபா என்பவர் யார் என்பதை நான் முழுமையாக உணர்ந்தேன். நிறைய பாபா கதைகள் கூறுவார்.

அதில் எனக்கு ஏற்பட்ட அனுபவம் என்னவென்றால் நான் பாபாவிற்கு விரதம் இருக்கிறேன் என்று தீவிர மாக விரதமிருந்து உடல் மிகவும் இளைத்து பலவீனமாக இருந்தேன். அக்காலகட்டத்தில்தான் என் விரத முறைகள் சரிதானா என்று என் குரு ஸ்ரீராம் அவர்களிடம் கேட்டேன்.

அதற்கு அவர் என்னிடம், பாபா விற்கு பசியோடு யார் வந்தாலும் பிடிக்காது. மேலும் உடலில் பசி இருக்கும் போது மனதில் ஞானம் ஏறாது என்று கூறி இனிமேல் உங்கள் விரதங்களை விட்டுவிடுங்கள் என்றார். பிறகு எனக்கு தியானம், யோகா கற்றுத் தந்தார்கள். அதனால் என் மனதிலும், உடலிலும் பல மாற்றங்களை நான் உணர்ந்தேன்.

அதன் பின்பு ஒரு நாள் எங்கள் குழந்தை நேகாவிற்கு உடல்நிலை சரியில்லாமல் போனது. நானும் என் கணவரும் மிகுந்த மனவேதனையில் இருந்தோம். அப்பொழுது குருநாதர் திரு.ஸ்ரீராம் அவர்கள் எங்களிடம் ஏன் கவலைப்படுகிறீர்கள்.

அவள் பாபாவின் குழந்தை. அவளை அவர் பார்த்துக் கொள்வார் என்றார். நானும் என் கணவரும் சரி என்றோம். இருந்தாலும் குழந்தைக்கு ஏதேனும் பிரச்சனை இருக்குமோ என்ற பயம் இருந்து கொண்டே இருந்தது.

மருத்துவர் எடுக்கச் சொன்ன அனைத்து பரிசோதனைகளையும் எடுத்தோம். ரிப்போர்ட்டில் எந்த பிரச் சனையும் இல்லை என்று வந்தது. இருந்தாலும் இரண்டு வருடங்களுக்கு தொடர்ந்து மாத்திரை சாப்பிட வேண்டும் என்றார்கள். எனக்கோ மாத்திரைகளை தொடர்ந்து கொடுக்க விருப்பம் இல்லை.

ஏன் என்றால் மாத்திரைகளால் குழந்தைக்கு ஏதேனும் பின் விளைவுகள்

சாயிமகராஜ் குருவைதேடி இணையத்தில் படிக்க...
www.saimaharaj.com

சாய் தியானா வாட்ஸ் அப் நம்பர்
99418 16692

Email: srirambaba1971@gmail.com

ஏற்பட்டு விடுமோ என்று பயந்தேன். அந்த சமயத்தில்தான் குருநாதர் திரு. ஸ்ரீராம் அவர்கள் தலைமையில் சீரடி செல்வதாக கூறினார்.

மேலும் சீரடிக்கு செல்ல ஆசைப் பட்டு செல்ல முடியாத நிலை யில் உள்ளவர்கள் இருபது நபர்களுக்கு ஒரு செல்வந்தர் இலவசமாக இருபது டிக்கெட்டுகளை வழங்கியிருக்கிறார். அதில் முதல் இரண்டு டிக்கெட் உங்களுக்குத்தான் என்று கூறினார். எனது சந்தோசத்திற்கு அளவே இல்லை. பாபாவின் கருணை மழையில் நனைந்ததை உணர்ந்தேன்.

எங்களுடன் சேர்ந்து நாற்பது பேரை சீரடி அழைத்துச் சென்றார் குருநாதர் திரு. ஸ்ரீஇராம் அவர்கள். சீரடி சென்று பாபாவை தரிசனம் செய்துவிட்டு என் குழந்தையை அன்றே பாபாவிடம் ஒப்படைத்து விட்டேன்.

இனி குழந்தைக்கு மாத்திரை கொடுக்க மாட்டேன். இனி நீதான் அவளுக்கு எல்லாம் என்று பாபாவிடம் கூறி உறுதியேற்றுக் கொண்டு இன்று வரை நான் குழந்தைக்கு மாத்திரை கொடுக்கவில்லை.

பாபாவின் ஆசியால் எங்கள் குழந்தை எந்த பிரச்சனையும் இன்றி நன்றாக உடல் ஆரோக்கியத்துடன் இருக்கின்றாள். பாபாவிடம் நாம் முழுமையாக சரணடைந்தால் நம்மை அவர் பார்த்துக் கொள்வார் என்பதை அனுபவப் பூர்வமாக உணர்ந்தேன்.

எனக்கு பாபா மேல் பூர்ண நம் பிக்கை வரக்காரணமாயிருந்த என் குருநாதர் திரு.ஸ்ரீராம் அவர்களுக்கு நாங்கள் என்றென்னும் நன்றிக் கடன் பட்டிருக்கின்றோம்.

குரு வாழ்க! குருவே துணை!!

- (தொடரும்..)



சாய் ராஜயோகாவின் தயாரிப்பு

அமிர்த சூரணம்

அனைத்து நோய்களுக்கும் ஒரே தீர்வு. தொடர்ந்து மூன்று மாதம் எடுத்துக் கொள்ள அதிசயத்தக்க மாற்றத்தை நீங்களே உணரலாம்.

குப்பைமேனித் தைலம்

அனைத்துவிதமான தோல் நோய்களுக்கும் ஓர் அற்புத தீர்வு. சொறி, நமைச்சல் இருக்கும் இடங்களில் தடவ ஒரிரு நிமிடத்திலேயே குணம் கிடைக்கும்.



தேவைக்கு தொடர்பு கொள்ளவும்:
சாய் ராஜயோகா இயற்கை நல்வாழ்வு மையம்

99418 16692,
88258 31068.

தொடர்: 3

வந்தார்



முன்கதை (வெங்கூசா தன் சீடன் தன்னிடம் வந்ததை எண்ணி மிகுந்த ஆனந்தமடைந்து அவனுடன் தன் தவ வாழ்வை தொடங்கினார். பாபுவின் தாய் இறந்ததும் குருவை அண்டி வாழ்ந்த பாபு விரைவில் குருவையும் பிரியப் போவதை உணர்ந்தான்)

"பாபு.. நீ இன்று காட்டிற்கு சென்று சுள்ளி பொறுக்கி வா.. குருவை நாராயணன் கவனித்துக் கொள்வான்.." தலைமைச் சீடன் நரஸிம்மா கட்டளையிட்டான்.

பாபு தயங்கினான்.

"என்ன தயங்குகிறாய், போ.." விரட்டினான் நரஸிம்மா.

பாபு தயக்கத்துடன் கோடாலியை எடுத்துக் கொண்டு காட்டை நோக்கி நடக்கத் தொடங்கினான்.

குருநாதர் இன்னும் சற்று நேரத்தில் தவம் கலைந்து எழுந்து விடுவார். என்னைத் தேடினால் என்ன செய்வேன். பாபுவிற்கு மனமெல்லாம் குருவிடமே இருந்தது. கால்கள் நகர மறுத்தன. இருப்பினும் தலைமை சீடனுக்கு அடிபணிய வேண்டுமே. சரி இதுவும் குருவின் கட்டளையாகத்தான் இருக்கும், என்று காட்டை நோக்கி நடந்தான் பாபு.

சாயி...

– ஸ்ரீராம்



வேகவேகமாக விறகை வெட்டி கட்டிக் கொண்டு குருவை பார்க்கும் ஆவலோடு புறப்பட்டான். ஒரு நாழிகை கூட குருவை பிரிவதென்பது இயலாத காரியம் பாபுவிற்கு.

விறகு கட்டை தலையில் சுமந்து கொண்டு நடந்தவனின் காதுகளில் யாரோ அழைப்பது போல் கேட்க, சட்டென்று நின்று காதுகளை கூர்மை யாக்கினான்.

"என்ன பாபு அவ்வளவு சீக்கிரம் புறப்பட்டுவிட்டாய்.. நான் அமர்ந்தி ருப்பதை கூட பார்க்காமல்.." என்ற குரலை கூர்ந்து நோக்கியவன்,

என்னது, நம் குருவின் குரல் போல் அல்லவா கேட்கிறது. வந்த வழியே இரண்டு அடி எடுத்து வைத்தான்.

அங்கே.. அவன் கண்களையே அவனால் நம்ப முடியவில்லை. ஒரு மரத்தின் அடியில் கால்களை நீட்டி சுகமாய் அமர்ந்திருந்தார் குருநாதர்.

விறகு கட்டை கீழே போட்டுவிட்டு குருநாதா என்று ஓடி வந்து கால்களை கட்டிக் கொண்டான்.

பாபுவையே கருணையோடு நோக்கி னார் குருநாதர்.

"குருவே, தாங்களைக் காணத்தான் அவ்வளவு விரைவாக வேலையை முடித்துக் கொண்டு புறப்பட்டேன்"

என்றான் பாபு.

"நான் அங்குமட்டும்தான் இருக்கின்றேன் என்று நினைத்தாயா, நான் எங்கும் இருக்கின்றேன். என் இனிய சீடனே.. வா வந்து என்னருகே உட்கார்."

பாபு அவரருகே அமர்ந்து அவரையே உற்று நேக்கத் தொடங்கினான். குருவும் தியானத்தில் ஆழ்ந்தார்.

நேரம் போனதே தெரியவில்லை. பாபு கண் விழித்துப் பார்த்தபோது மாலையாகிவிட்டிருந்தது. சுற்றும் முற்றும் பார்த்தான். குருவைக் காண வில்லை. குடிலுக்குச் சென்றிருப்பாரோ, அப்படித்தான் இருக்க வேண்டும். விறகுக் கட்டை தூக்கிக் கொண்டு விரைவாய் நடக்கத் தொடங்கினான்.

ஆஸ்ரமத்தில் நரசிம்ம மூர்த்தி போல் நின்றிருந்தான் நரஸிம்மா.. "பாபு, விறகு வெட்டி வர உனக்கு இவ்வளவு நேரமா.. விறகில்லாமல் எப்படி சமைப்பது.. வர வர உன் சோம்பேறித்தனத்திற்கு அளவே இல்லை.. இனிமேல் இப்படி நடந்து கொண்டாயானால் குருவிடம் சொல்லி விடுவேன் என்றான்.

பாபு விறகு கட்டை கீழே இறக்கி வைத்துவிட்டு குருவைப் பார்க்க ஓடினான். குரு அங்கே ஆழ்ந்த யோக நித்திரையில் இருந்தார்.

பாபுவிற்கு உணவும் தேவையிருக்க வில்லை. நீரும் தேவை இருக்கவில்லை. குருவின் அருகிலேயே அமர்ந்து விட்டான்.

மற்ற சீடர்களும் தத்தமது வேலை களை முடித்துவிட்டு மாலை நேர தவத்திற்கு அனைவரும் குருவின் முன் கூடினர்.

தவம் நிறைவு பெற்றபின் குரு கண் விழித்தார். நரசிம்மாவைப் பார்த்து, "என்ன நரசிம்மா, ஏதாவது குறை இருக்கிறதா.." என்று கேட்டார்.

"ஒரே ஒரு குறை.. இந்த பாபுதான் குருநாதா, எந்த வேலையும் சரியாய் செய்ய மாட்டேன் என்கிறான். குருவே! இன்று காலையில் விறகு வெட்டப் போனவன், எங்கோ ஊர் சுற்றிவிட்டு இப்போதுதான் வருகின்றான். அவனை நீங்கள்தான் கேட்க வேண்டும்."

"என்ன பாபு அப்படியா" என்றார் குரு.

"அப்படி எல்லாம் நான் ஊர் சுற்ற வில்லை குருவே"

"பிறகு மாலை வரை என்ன செய்து கொண்டிருந்தாய்."

"தங்களுக்குத்தான் தெரியுமே குருவே."

"எனக்குத் தெரியும், அவர்களுக்கும் தெரியவேண்டுமே.. நீயே கூறு"

"நான் தங்களுடன் தவம் செய்து கொண்டிருந்தேன் குருவே"

"பார்த்தீங்களா குருவே. நீங்கள் இங்கிருந்து எங்கும் செல்லவில்லை. காட்டிற்குள் உங்களுடன் தவம் புரிந்ததாய் கூறுகின்றான். பொய் வேறு நிறைய கூறுகிறான் குருவே."

நரசிம்மாவை கையமர்த்திய குரு, "சரி சரி.. இனிமேல் காலம் தாழ்த்தாது விரைவில் வேலையை முடித்து வா.. பாபு.." என்று வாதத்தை முடித்தார்.

ஆயினும் பாபு தினம் தோறும் காட்டிற்கு சென்று விறகு வெட்டிக் கொண்டு திரும்பி வரும் போது குருவின் குரல் கேட்டதும் பாபு குருவைத் தேடிப் போவதும், அவருடன் தவம் செய்வதும் திரும்பி வர கால தாமதம் ஆவதும் தொடர் கதையாகிப் போனது.

ஏன் தாமதம் என்று கேட்டால்



குருவின் உடன் இருந்ததாக சாதிப்பான் பாபு.

சீடர்கள் அனைவரும் கூடிப் பேசினர். இப்படியே விட்டால் சரியாக வராது. ஒருநாள் அவனை பின் தொடர்ந்து சென்று பார்த்துவிடுவது என்று முடிவு செய்தனர்.

மறுநாள் காலை பாபு காட்டிற்குப் புறப்பட்டதும் அவன் அறியாது அவனை பின் தொடர்ந்தனர்.

பாபு அன்றைக்கு தேவையான விறகை வெட்டி கட்டி வைத்துவிட்டு எப்போதும் தன் குருவை சந்திக்கும் இடத்திற்குச் சென்றான்.

அங்கு எப்போதும் போல் குரு அமர்ந்திருக்க அவர்முன் சென்று அமர்ந்தான் பாபு.

தொடர்ந்து வந்த சீடர்கள் இக்காட்சியை கண்டு மனம் வெகுண்டனர். குரு பாபுவிற்கு மட்டும் தனியாக கற்பிக்கின்றார். இதென்ன அநியாயம். இதை சும்மா விடக்கூடாது. நம் குரு நல்லவர்தான். இந்த பாபுதான் நம் குருவை கெடுத்து விட்டான். இனி இவனை உயிரோடு விடக் கூடாது, என்று வெகுண்ட நரசிம்மா கீழே கிடந்த செங்கல்லை எடுத்து பாபுவை நோக்கி வீசினான்.

அந்தக் கல் பாபுவின் தலையருகே வரும் போது, குரு தன் பார்வையாலேயே அக்கல்லை அந்தரத்திலேயே நிறுத்தினார். குருவின் கண் அசைவிற்கு கட்டுப்பட்ட அந்தக் கல் மேற்கொண்டு நகராமலும், பாபுவை தாக்காமலும் அந்தரத்திலேயே அசையாமல் நின்றது.

அதே நேரம் மற்றொருவன் பாபுவைத் தாக்க இரண்டாவது செங்கல்லை எறிய அது சரியாக குரு வின் தலையை தாக்கி குருதியை வெளிப்படுத்தியது.

ரத்தம் பெருக்கெடுத்து சிதற குருவே என்று ஓடி வந்த பாபு, குருவைத் தாங்கிப் பிடிக்க மண்ணில் சரிந்தார் குருநாதர்.

சித்தர்களின் ஜீவசமாதி தரிசனம்



சித்தன், சித் என்றால் அறிவு, அறிவே தெய்வம் என்ற முதுமொழிக்கேற்ப எதையும் அறிவால் ஆராய்ந்து, மெய்யுணர்வை அடைந்து, இறையின் உண்மை இருப்பிடத்தை அறிந்துணர்ந்து எதிலும் நிறை வடைந்தவர் என்று பொருள்.

சீவனை சிவமாக மாற்றிக் கொண்டவர்கள். தாம் நினைக்கும் நேரம் ஊத்தை சடலத்தை உதறி ஒளி தேகம் பெறுபவர்கள். தன்னை நாடி வரும் சீடனை உய்விக்கும் நடமாடும் தெய்வங்கள்.

சித்தர்களின் அனுக்கிரகம் கிட்டினால் அடைய இயலாத இலக்கு இல்லை எனலாம். சித்தர்கள் அடங்கி இருக்கும் சீவ சமாதிகளை தேடிச் சென்று தியானம் செய்து வணங்கினால் அங்குள்ள அதிர்வலைகள் நம்மீது பட்டு நம் உடல், மனம்,



சுத்தமாகும். வாழ்க்கையில் பல அதிசயத்தக்க பல மாற்றங்கள் ஏற்படும்.

எனக்கு சிறு வயது முதலே ஆன்மீக ஈடுபாடு உண்டு. கடந்த மூன்று மாதங்களுக்கு முன்பு ஒரு தனியார் தொலைக்காட்சி மூலமாக 300 வருட பழமையான குழந்தை வேலு சுவாமிகள் மற்றும் அவருடைய சீடர் திரு.முத்தையா சுவாமிகளுடைய ஜீவ சமாதி மயிலாப்பூரில் இருப்பதை தெரிந்து அங்கு சென்று வழிபட்டேன்.

அதிலிருந்து ஒரு விதமான ஆன்மீக உணர்வு எனக்குள் தூண்டப்பட்டிருப்பதை உணர்ந்தேன். அப்போதிருந்து சித்தர்கள் குடிகொண்டிருக்கும் சீவ சமாதிகளை தேடி சென்று வணங்கி வருகின்றேன். என் வாழ்க்கை நல்ல பல மாற்றங்களை அடைந்திருக்கிறது.

இதை அனைவரும் உணர வேண்டும் என்பதற்காக "சாயி மகராஜ் குருவைத் தேடி" பத்திரிகையில் எழுத வாய்ப்பு கொடுத்த ஐயா நிறுவனர்,

ஆசிரியர் திரு.வி.ஸ்ரீராம் அவர்களுக்கும், வாய்ப்பு கொடுக்கச் சொன்ன நான் வணங்கும் சீரடி சாய் பாபாவிற்கும் என் தாய், தந்தைக்கும் என் ஆர்மார்த்தமான நன்றியை காணிக்கையாக்குகிறேன்.



அன்புடன்,
வெங்கடேசன்,
அயனாவரம், 9941782523

பட்டினத்தார் வாழ்க்கை வரலாறு

பட்டினத்தாரின் இயற்பெயர் திருவெண்காடார். காவிரிப் பூம்பட்டினத்தில் வணிகர் குலத்தில் சிவநேசர் ஞானக்கலை தம்பதியினருக்கு மகனாய் பிறந்தார். ஐந்து வயதில் தந்தையை இழந்தார்.

இருப்பினும் இறை அச்சத்தோடு கல்வி பயின்று, சுற்றமும் சூழமும் போற் றும்படி வாணிபம் செய்து பெரும் செல்வந்தரானார். சிவகலை என்னும் குலமகளை இல்லற துணைவி ஆக்கிக் கொண்டார். பல ஆண்டுகளாக குழந்தை வரம் இல்லாததினால் சிவனை வழிபட்டு புத்திரப்பேறு அருளும்படி வேண்டினார்.

திருவிடை மருதூரைச் சேர்ந்த சிவனடியார் சிவசருமர் சுசீலை தம்பதி யினரின் மகன் மருதவாணரை எடைக்கு எடை பொன் கொடுத்து பெற்றுக் கொள்ளும்படியும், அதே நேரத்தில் சிவசருமர் சுசீலை தம் பதியினருக்கும் கனவில் சிவபெருமான் பட்டித்துச் செட்டி திரு வெண் காடாரிடம் குழந்தையை கொடுத்து உன் வறுமையை நீக்கிக் கொள் எனவும் உணர்த்தினார்.

அதே போல் மருதவாணரை தத்து எடுத்து சீறும் சிறப்புமாக வளர்த்தார். வாலிப வயது வந்ததும் தன் தந்தையின் தொழிலையே கவனித்து வந்தார்.

நம் நாட்டு முத்து, பவளம், வாசனை திரவியங்களை கப்பலில் ஏற்றி வெளிநாடுகளில் விற்று அங்கிருந்து தங்கம், வைரங்களை தருவிக்கும் வாணிபம் செய்து வந்தனர். ஏராளமான செல்வம் கொட்டிக் கிடந்தும் மேலும் மேலும் செல்வம் சேர்க்கும் ஆசை குறையவில்லை திருவெண்காடாருக்கு.

சிவன் திருவுள்ளம் கொண்டான். திருவெண்காடாரை சிவனடியாராக்கிட தயவு செய்தான். வியாபாரத்திற்கு சென்ற மகன் திரும்ப வந்து ஒரு சிறிய பெட்டியை தந்தைக்கு பரிசளிக்க, என்று தாயிடம் தந்துவிட்டு செல்கின்றான்.

தந்தை வந்து அதை பிரித்துப் பார்க்க அதில் காது இல்லாத ஊசி ஒன்றும், ஓலை ஒன்றும் இருக்கிறது. ஓலையை படித்துப் பார்க்க, அதில் "காதற்ற ஊசியும் வாராது காண் கடை வழிக்கே" என்றிருந்தது.

அந்நொடியிலேயே நிலையான செல்வம் என சிவம் இருக்க நிலையற்ற செல்வத்தை தேடிவிட்டோமே என்று எண்ணி துறவறம் பூண்டார்.

அனுதினமும் சிவனை வணங்கி முக்தி பெற வேண்டினார். பேய்கரும்பின் நுனி எங்கு, என்று உனக்கு இனிக்கிறதோ அன்றே அங்கேயே முக்தி என அருளினார்.

அன்றிலிருந்து யாத்திரையை மேற் கொண்டார் திருவெண்காடார். காவிரி பூம்பட்டினத்தில் பிறந்தவர் என்பதால் "பட்டினத்தார்" என்று அழைக்கப்பட்டார். உஜ்ஜனியை ஆண்ட மன்னனை "பத்ரகிரியார்" என்ற நாமம் சூட்டி தனது சீடனாக ஏற்றுக் கொண்டார்.

திருவிடை மருதூரில் தங்கியிருந்த போது பத்ரகிரியார் முக்தி அடைய, பட்டினத்தார் மேலும் சிவ தலங்களை தரிசித்து சென்னை திருவொற்றியூர் வந்தவுடன், அங்கு இருந்த பேய்கரும்பை சுவைத்துப் பார்க்க அது இனித்தது.

அங்கே கடற்கரையில் விளையாடிய சிறுவர்களை அழைத்து தன்னை ஒரு கூடையை வைத்து மூடிவிடும்படி கூற அவர்களும் அவ்வாறே செய்து பின் திறந்து பார்க்க பட்டினத்தார் மறைந்து லிங்க வடிவாக காட்சி தந்தார்.

ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு அன்று அவ்வாறு முக்தி அடைந்த இடமே இன்று நாம் தரிசிக்கும்



திருவொற்றியூர் ஸ்ரீ பட்டினத்தார் ஜீவசமாதி ஆகும்.

வருடம் தோறும் ஆடி மாதம் பவுர்ணமியை ஒட்டி வரும் உத்திரம் நட்சத்திரம் அன்று குரு பூஜை நடைபெறும். ●

தொடர்: 3

பாபா காட்டும் வழி

தங்களுடைய எண்ணங்கள் நிறை வேற வேண்டும் என்பதற்காகவே பெரும் பாலான மனிதர்கள் கடவுளை வழிபடு கிறார்கள். மகான்களின் வரலாறு களை வாசிக்கும் ஒரு சிலரே கடவுளை காண வேண்டும் என்று உணர்கிறார்கள்.

கடவுளை காண்பது என்பது ஒரு அனுபவம். இந்த அனுபவத்தை உணர்ந் தவர்களால் அதை மற்றொருவர்களுடன் பகிர்ந்து கொள்ள முடியாது. ஆனால் சாயிநாதன் போன்ற அவதார புருஷர் களால் தங்களை அண்டிய பக்தர்களுக்கு இவ்வனுபவத்தை பெற வழிகாட்ட முடியும்.

ஒரு முறை பாபாவிடம் ஒரு பக்தர் வந்து பாபா என் மனம் அடங்கவே மாட்டேன் என்கிறது. அதை எப்படி அடக்குவது என்று கேள்வி கேட்டார்.

"நான்" எங்கெல்லாம் செல்கிறதோ, அங்கெல்லாம் சென்று வா, மனம் அடங்கும் என்றார்.

உடனே அந்த பக்தர், பாபா காலையில் இருந்து மாலை வரை எங்கெல்லாம் செல்வார் என்பதை கேட்டு அதன்படி, பாபா எங்கெல்லாம் செல்வாரோ, அங் கெல்லாம் சென்று வருவதையே பழக்க மாக்கிக் கொண்டார்.

ஒரு வாரம் கழித்து அவரின் மனம் அடங்கியதாய் தெரியவில்லை. மீண்டும் பாபாவிடம் சென்று, பாபா நீங்கள் சொன் னது போல் நீங்கள் செல்லும் இடம் எல்லாம் சென்றும் என் மனம் அடங்க வில்லை பாபா என்று முறையிட்டார்.

பாபா அதற்கும் ஒரு கதை சொன்னார். வெகு காலத்திற்கு முன்பு காலில் அடிபட்ட ஒருவன் என்னிடம் வைத்தியம் செய்து கொள்ள வந்தான். அவனுக்கு நான் ஒரு தைலத்தைக் கொடுத்து அடிபட்ட இடத்தில் தடவி வா, சரியாகிவிடும் என்றேன்.

அவனும் சென்று ஒரு வாரம் கழித்து மீண்டும் வந்து அடிபட்ட காயம் ஆறவே இல்லை பாபா என்று முறையிட்டான். காயத்தை காட்டு என்றேன். காயத்தைக் காட்டினான். ஆறாமலே இருந்தது. தைலத்தை தடவ சென்னேனே தடவினாயா என்றேன். தடவினேன் பாபா என்றான்.

வந்தவனிடம், எங்கே என்றேன். நீங்கள் தானே பாபா அடிபட்ட இடத்தில் தடவ



சொன்னீர்கள். நான் அடிபட்டது கந்தோபா கோவில் வாசலில். தினம் அங்கு சென்று அடிபட்ட இடத்தில் தைலத்தை தடவி னேனே என்றான், என்று கூறி சிரித்தார் பாபா.

பாபாவிடம் ஒரு ஏழை பக்தன் ஒரு முறை தன் ஏழ்மை நிலையை பாபாவிடம் சுட்டிக் காட்டி நான் அடிக்கடி சீரடி வந்து உங்களை தரிசிக்க ஆசைப்படுகிறேன். ஆனால் என் ஏழ்மை நிலை என்னை தடுக்கிறது என்று வருத்தப்பட்டார்.

அதற்கு பாபா, நீ ஏன் வரமுடியவில்லை என்று கவலைப்படுகிறாய், நான் இங்கு மட்டும்தான் இருக்கின்றேன் என்று நினைத்தாயா, நான் எங்கும் இருப்பவன். நீ வரமுடியவில்லை என்றால் என்ன, நீ என்னை மனதார நினைத்த மாத்திரத்தி லேயே நான் உன்னை நீ இருக்கும் இடத்திற்கே வந்து பார்க்கிறேன் என் கிறார். எவ்வளவு இனிய எளிய வழியை பாபா காட்டுகிறார்.

சில மாதங்களுக்கு முன்பு சீரடிக்கு

சென்ற குழுவில் நானும் அழைக் கப்பட்டு அவர்களோடு சேர்ந்து செல்லும் அனுபவம் கிட்டியது.

அக்குழுவில் உள்ள ஒரு நபர் அனைவரிடமும் அடிக் கடி நான் இதுவரை இருபது தட வைக்கு மேல் சீரடிக்கு வந்து இருப்பதாக பெருமையடித்துக் கொண்டார். ஊரில் இருக்கும் போதுதான் லௌகீக விசயங் களில் மனம் முழ்க்கிருப்பதனால் சாய்ராம் என்று சொல்லக்கூட நேரம் இல்லாது போகிறது.

பல அலு வலுக்கிடையே இறைவனை நினைக்க இறைவ னே நமக்கு சீரடி செல்ல சில நாட்களை ஒதுக்கி தந்தும் அந்த புனிதப் பயணத்திலும் இறை நாமத்தை நினையாமல் விட்டு விட்டு, சுய பெருமைகளை பேசித் திரிவதில் என்ன பயன் கிட்டப் போகிறது. இதுவா பாபா காட்டும் வழி.

அவரின் சுய பெருமைகளை கேட்ட போது பாபாவின் அடி யவர் திரு. ஸ்ரீரேகே அவர்கள் இதே போன்று ஒரு சம்பவத்தில் அளித்த பதில் என் நினைவிற்கு வந்தது.

"அடிக்கடி சீரடிக்கு வருவ தால் மட்டும் ஒருவர் பாபாவின் அரு ளை பெற்றதாக ஆகிவிட முடி யாது. ஒரு பசுவின் மடி யைச் சுற்றிலும் உண்ணிகள் என்ற பூச்சிகள் மொய்த்துக்



கொண்டிருக்கின்றன. ஆனால் அவைக ளால் பாலின் சுவையை அறிய முடியுமா? பசுவின் மடியிலிருந்து பாலை கறப்பவனே பாலின் ருசியை உணர முடியும். என்கிறார் திரு. ஸ்ரீரேகே.

மனம் கட்டுக் கடங்காததே இதற்கு காரணம். அதை ஒரு நிலைப்படுத்த முயற்சி தேவை. ஒரு ஈ பல பொருட்கள் மீது உட்காரும். ஆனால், தீயைக் கண்டவுடன் விலகிச் சென்றுவிடும்.

அதே போல் மனமும் இந்திரியங்களை கவரும் எல்லா பொருட்களையும் நாடிச் செல்லும். ஆனால் கடவுளை கண்டறிவதற்குப் பதில் கண்டதையும் அறிய முற்படுகிறது. மனம் கட்டுக் கடங்காதவரை சம்சாரத்தில் உழல வேண்டி மீண்டும் மீண்டும் பிறவி எடுக்க நேருகிறது.

அதைத் தவிர்ப்பதற்கு பாபா காட்டும் வழியே எளிய வழி.

- தொடரும்...

காணிக்கையின் மகத்துவம்

மும்பை தாதர் என்னும் ஊரில் விட்டல் தேஷ்பாண்டே என்னும் 12 வயதுடைய சிறுவன் தன் தாய், தந்தை மற்றும் தன் தந்தையின் அப்பாவாகிய தாத்தாவுடன் வாழ்ந்து வந்தான். விட்டல் தன் தாத்தாவின் மீது மிகவும் பாசமாக இருந்தார்.

மிகவும் வயதானவரான தாத்தா விற்கு கண் பார்வை மெல்ல மெல்ல மங்கி முழுவதுமாக தன் கண் பார்வை யை இழந்தார். தாத்தாவிற்கு கண் பார்வை போனதும் விட்டலுக்கு மிகவும் வருத்தமாகிப் போனது.

தாத்தாவின் அனைத்து தேவைகளுக் கும் விட்டலே துணையாய் உதவி செய்து வரலானான். சில மாதங்க ளுக்குப் பின் பாந்த்ராவில் வாழ்ந்து வந்த கோவிந்ராவ் மான்கர் என்ற ஆன்மீகவாதியை விட்டலின் தாத்தா சந்தித்தார். அவர் பாபாவின் தீவிர பக்தர் ஆவார்.

அவர் தாத்தாவிடம் நீங்கள் சீர டிக்குச் சென்று பாபாவை தரிசனம் செய்து பாபாவின் அருளைத் தேடுங் கள். அவர் மனம் வைத்தார் என்றால் உங்கள் கண் பார்வை நிச்சயம் திரும்பி விடும் என்றார். அவர் மேல் விட்டலின் தாத்தா மிகுந்த மதிப்பு வைத்திருந்தார். அவர் கூறியது போல் சீரடி சென்று பாபாவை தரிசிப்பது என்று முடிவு செய்தார். ஆனால் அவரின் மகனுக்கோ நேரமே இல்லை. எனவே சிரடிப் பயணம் தள்ளிப் போய் கொண்டே இருந்தது.

ஒரு கட்டத்தில் விட்டல் நானே உனக்கு துணையாய் வருகிறேன் தாத்தா நாம் இருவரும் சீரடிக்குச் செல்லலாம் என்று கூற குடும்பத்தினரும் அதுவே சரி என்று முடிவு செய்து இருவரையும் சீரடிக்கு அனுப்பி வைத்தனர்.

பெற்றோர் விட்டலிடம் தாத்தாவை நல்ல முறையில் கவனித்துக் கொண்டு, அவரை பாதுகாப்பாக பார்த்துக் கொள் ளும்படியும் மீண்டும் மீண்டும் கூறி அனுப்பி வைத்தனர்.

1916 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் சீரடியை அடைந்தனர் தாத்தா வும் பேரனும். துவாரகாமாயிக்கு சென்று பாபாவின் பாதங்களில் விழுந்து நமஸ்காரம் செய்தனர். பாபா அவர்களிடம் எனக்கு தட்சணையாக 6 ரூபாய் கொடு என்று கேட்டார்.

பாபா கூறியதும் விட்டல் தன் பையில் கை விட்டு பணத்தை எடுத் தான். விட்டலிடம் ஒரு 10 ரூபாய் ஒரு 5 ரூபாயும் மட்டுமே இருந்ததினால்,



விட்டல் 10 ரூபாயை பாபாவிடம் கொடுத்தான். ஆனால் பாபா அதை ஏற்றுக் கொள்ளாமல் அவனிடம் இருந்த ஐந்து ரூபாயை வாங்கிக் கொண்டு இன்னும் ஒரு ரூபாய் கொடு என்று பிடிவாதம் செய்தார்.

விட்டல் மீண்டும் பத்து ரூபாயை கொடுக்க முயன்றும் பாபா அதை வாங்காமல் எனக்கு 6 ரூபாய்தான் வேண்டும் என்று மீதி ஒரு ரூபாயை கொடு என்று கேட்டார்.

அதனால் விட்டல் தாத்தாவை அழைத்துக் கொண்டு துவாரகாமாயின் வெளியில் வராண்டாவில் ஓர் ஓரமாக உட்கார வைத்துவிட்டு சில்லரை வாங்கி வந்து விடுகிறேன் என்று தாத்தாவிடம் கூறிவிட்டு சென்றான். பத்து ரூபாய்க்கு அந்த ஊரில் யாருமே அவனுக்கு சில்லரை அளிக்கவில்லை.

நீண்ட நேரம் சில்லரை கேட்டு அலைந்து களைப்படைந்த விட்டல், மனம் தளர்ந்து அழ ஆரம்பித்தான். அவன் முன் ஒரு பெரிய மனிதர் வந்து ஏன் அழுகிறாய் என்று கேட்டார்.

விட்டல் நடந்தவற்றைக் கூறி அவரிடம் பாபா மிகவும் பிடிவாதமாக இருப்பதாகவும் கூறினான். அதற்கு அந்த பெரியவர், அவ்வளவுதானே இதோ நான் உனக்கு சில்லரை தருகிறேன். அதற்காக ஏன் அழுகிறாய் என்று விட்டலிடம் இருந்து 10 ரூபாயை வாங்கிக் கொண்டு சில்லரை கொடுத்தார்.

விட்டல் அதை வாங்கிக் கொண்டு துவாரகாமாயிக்கு ஓடினான். அங்கு பாபாவின் பாதத்தில் 6 ரூபாயை வைத்து வணங்கினான். அவனின் தலையில் கை வைத்து ஆசீர்வதித்த பாபா என் குழந்தையே, எதற்கும் பயப்படாதே, அல்லா நல்லதே செய்வார். இப்போது உன் வேலை வெற்றியடைந்தது என்றார்.

விட்டல் பாபா கூறியதைக் கேட்டு குழம்பினான். நாம் பாபாவிடம் எதற்கு வந்தோம் என்று கூறவே இல்லை. அவரும் நம்மிடம் எதைப் பற்றியும் கேட்கவில்லையே என்று பாபாவை பார்த்தபடியே நின்று கொண்டிருந்தான்.

பாபா மீண்டும் அதே சொற்களை கூறினார். விட்டல் மேலும் குழம் பியவாறு தாத்தாவை அமர வைத்த இடத்திற்குச் சென்றான். ஆனால் அங்கு அவன் தாத்தாவை காணவில்லை. தாத்தா தாத்தா என்றபடி துவாரகாமாயியை சுற்றி லும் தேடினான். தாத்தாவைக் காண வில்லை.

அதன் பிறகு விட்டல் அழுது கொண்டே சீரடி கிராமம் முழுவதும் சுற்றி வந்தான். அவரை எங்கும் காணோம். தாத்தா எங்கு சென்றாரோ, கண் பார்வையும் இல்லை. எங்காவது சென்று விழுந்து அடிபட்டு இருக்கு மோ, என சிந்தித்துக் கொண்டு மிகுந்த பயத்துடன் அழுது கெண்டே நின்றிருந்தான்.

அப்போது, சில்லரை கொடுத்த அதே பெரிய மனிதர் அவனிடம் வந்து, நீ ஏன் மீண்டும் அழுகிறாய் என்றார். விட்டல் அழுது கொண்டே அவரிடம் விபரத்தை கூறினான். சரி சரி உன் அழுகையை நிறுத்து, உன் தாத்தா சாதே வாடாவின் படியில் அமர்ந்திருக்கிறார். போய் பார் என்றார்.

விட்டல் அங்கு சென்று பார்க்க அவனது தாத்தா சாதே வாடாவில் அமர்ந்து மகிழ்ச்சியாக கரும்பு சாப்பிட்டுக் கொண்டிருந்தார். விட்ட லுக்கு கோபம் வந்துவிட்டது. நான் அமர வைத்த இடத்தை விட்டு ஏன் சென்றீர்கள். கீழே விழுந்து அடிபட்டு காயம் ஏற்பட்டு இருந்தால் என்னாவது. நீங்கள் எப்படி இங்கு வந்தீர்கள் என்றான்.



அதற்கு தாத்தா, நீ என்னை இங்கு உட்கார வைத்துவிட்டு போன பின்பு என் உடலில் ஏதோ ஒரு மாற்றம் ஏற்பட்டது. என் கண்கள் தெளிவாக தெரிய ஆரம்பித்துவிட்டது. நீ திரும்ப வந்து பாபாவிற்கு தட்சிணை அளித்ததை நான் இங்கிருந்து மிகத் தெளிவாகப் பார்த்தேன் அதனால்தான் அங்கிருந்து எழுந்து வாடாவிற்கு வந் தேன் என்றார்.

விட்டல் தன் தாத்தா விற்கு கண் பார்வை

கிடைத்துவிட்டதை அறிந்து மிகவும் ஆனந்தம் அடைந்தான். பாபாவிற்கு 6 ரூபாய் தட் சிணை அளித்த அந்த நொடியில் இருந்து அவன் தாத்தா முழுமையாக குணமடைந்தார். பாபா நம்மிடம் தட்சிணை வாங்குவதன் மூலம் நம் கர்மாவை அழித்து நமக்கு நன்மையை செய்கிறார் என்பதை விட்டல் உணர்ந்து கொண்டான்.

அதன் பின்பு அவர்கள் மகிழ்ச்சி யாக வீட்டிற்குத் திரும்பினர். பாபாவின் அருளால் தாத்தாவிற்கு கண் பார்வை திரும்பியதை அனை வரும் உணர்ந்து கொண்டு பாபாவிற்கு நன்றியை தெரி வித்தார்கள்.

ஆனால் விட்டலுக்கு மட்டும், தனக்கு கஷ்டம் வந்த போதெல்லாம் வலிய வந்து உதவிய அந்த பெரிய மனிதர் யார் என்பது மட்டும் புரியவே இல்லை.

நமக்கு புரிகிறதல்லவா? சாயியை போற்று வோம்! சகல நன்மை களையும் பெறுவோம்! !

அன்னதான சேவை

அன்பிற்கினிய சாயி சொந்தங்களே...

நமது சாயி மகராஜ் குருவை தேடி பத்திரிகையின் சார்பாக, பிரதிவாரம் வியாழன் தோறும், நடமாட முடியாமல் இருக்கும் முதியோர்கள், உடல் ஊனமுற்றோர்கள், மனநலம் குன்றியோர்களின் இருக்கும் இடம் தேடி சென்று அன்னதான சேவை நடந்து வருகிறது. அன்னதான சேவையில் பங்குபெற காணிக்கை அனுப்ப விரும்பினால் கீழ்கண்ட வங்கி கணக்கிற்கு அனுப்பி உதவலாம்.

S.Jayanthy,

93/34. K.H. *ரோடு, 2வது மாடி (*SBI *பேங்க் எதிரில்),*
அயனாவரம், சென்னை – 600 023.

ஆன்லைனில் அனுப்ப:

S.Jayanthy, INDIAN BANK
AC.No: 602264370 , IFS Code No: IDIB000P056
(Purasaiwakkam Branch) Chennai

இம்மாத அன்னதான நன்கொடையாளர்கள்:

1. **திரு. ஹரி கிருஷ்ணன் சென்னை – ரூ. 3,000**
2. **திரு. பிரவீணா, பள்ளப்பட்டி – ரூ. 1,200**
3. **திரு. எல்.காமராஜ், சென்னை – ரூ. 1,500**

4. திரு. ஹேமாவதி யுவராஜ், சென்னை – ரூ. 500
5. திரு. ரம்யா முருகதாஸ், சென்னை – ரூ. 500
6. திரு. புவனா சுரேஷ், சென்னை – ரூ. 500
7. திரு.லதா பாபு, சென்னை – ரூ. 500
8. திரு.யாஸ்மின் ஸ்ரீதர், சென்னை – ரூ. 500
9. பரிமளா, சென்னை – 500
10. திரு. கவிதா, அம்மைய நாயக்கனூர் – ரூ.200
11. திரு.ரேவதி, அம்மைய நாயக்கனூர் – ரூ.200
12. திரு.உமா, அம்மைய நாயக்கனூர் – ரூ.200
13. திரு.ஜெயந்தி, அம்மைய நாயக்கனூர் – ரூ.200
14. திரு. சுகன்யா, அம்மைய நாயக்கனூர் – ரூ.150
15. திரு.தங்கமணி, அம்மைய நாயக்கனூர் – ரூ.150
16. திரு.அபி, அம்மைய நாயக்கனூர் – ரூ.200
17. திரு.சாந்தி, அம்மைய நாயக்கனூர் – ரூ.200
18. திரு.புஷ்பவள்ளி, அம்மைய நாயக்கனூர் – ரூ.200
19. திரு.மீனா, சின்னாளப்பட்டி – ரூ.200
20. திரு.பொன்ராஜ், பள்ளப்பட்டி – ரூ. 200
21. திரு.அர்ச்சனா, ஆண்டிப்பட்டி – ரூ.200
22. திரு.ஹேமலதா, சென்னை – ரூ.250
23. திரு.செல்வி, அம்மைய நாயக்கனூர் – ரூ.200





தொடர்: 3

மவுனம்



என்னுடைய நண்பர் ஒருவர் என்னுடன் சேர்ந்து மவுனம் மேற்கொள்ள விருப்பப்பட்டார். ஒரு குறிப்பிட்ட நாளில் தொடர்ந்து மூன்று நாட்கள் மவுனம் மேற்கொள்வதாக ஏற்பாடு.

முதல் நாள் மவுனத்தில் வாய் பேச்சை நிறுத்தி விட்டு மனம் பேசுவதை உன்னிப்பாக கவனிக்க வேண்டும் எனவும், இரண்டாம் நாள், மனம் பேசி பேசி களைத்துப் போய் சற்று அமைதியாய் இருக்கும். அப்போது அதற்கு ஓம் சாய்ராம் என்ற மந்திரத்தை உச்சரிக்கக் கொடுத்தால் அது உடனே அதைப் பிடித்துக் கொள்ளும்.

மூன்றாம் நாள் அதையும் விடுத்து மனம் தானே எந்த சிந்தனையையும் எழாது பார்த்துக் கொண்டு ஒரு மோன நிலையை எய்தும். அதிலேயே ஆழ்ந்திருப்பதே எங்கள் ஸ்ரீ சாய்ராம் ஆத்ம ஞான சபையின் மவுன திட்டம்.

மவுனம் ஆரம்பித்தாகிவிட்டது. அதாவது மனதின் பழைய குப்பைகளை களைந்து அகற்றுவதே நோக்கம். அப்படியானால் புதிய குப்பைகள் வரக் கூடாதல்லவா? புதிய குப்பைகள் சேரக் கூடாதென்றால், தனிமையில் இருப்பதும் ஒரே அறைக்குள் இருப்பதும், வேறு

வேலைகள் செய்யாதிருப்பதும்தான் மவுன கொள்கை.

முதல் ஒரு மணி நேரம் மனம் நேற்று நடந்தது, போன வாரம் நடந்தது என்ற தேவை இல்லாத குப்பைகளை பற்றி சிந்தித்துக் கொண்டிருந்தது. அதை 'நான்' கூர்ந்து கவனித்துக் கொண்டிருந்தது. அதாவது 'நான்' இங்கு சாட்சி மட்டுமே. மனம் நினைப்பதை எல்லாம் செய்து கொண் டிருப்பது என் வேலை அல்ல. "எண்ணத்தை கவனித்தலே மவுனம்." எண்ணத்தை பின்தொடர்தலோ, செய்ய துடிப்பதோ, மேலும் குப்பையை சேர்ப்பதாகும். பின் எப்போது பழைய குப்பைகளை அகற்றுவது.

இரண்டு மணி நேரம் கடந்தது. நண்பர் சற்றே நெளிந்து கொடுத்தார். என்னைப் பார்த்து மெல்லச் சிரித்தார். மெல்ல கையை அசைத்து இதோ வந்து விடுகிறேன் என்று சைகை செய்தார். பின் எழுந்து கழிவறை சென்று விட்டு வராண்டாவில் அங்கும் இங்குமாய் நடந்து கொண்டிருந்தார். எதார்த்தமாக அவரது நண்பரான ஒருவர் சபைக்கு வர அவருக்கு வணக்கம் தெரிவித்து தான் மூன்று நாட்கள் மவுனம் இருக்கப் போவதாக தெரிவித்தார். தொடர்ந்து அவர் ஏதோ கேட்க இவரும் சைகையாலேயே பதில் சொல்ல அவரின் மவுனம் தொடர்ந்தது.

ஏறக்குறைய இதே செயல்பாட்டில் நண்பர்கள் இருவரும் மதிய உணவு அருந்தி மாலை 4 மணி வரை பேசிக் கொண்டிருந்தனர்.

பழைய குப்பைகளை கழிக்காமல் புதிய குப்பைகளை டன் கணக்கில் ஏற்றிக் கொண்டிருந்தார்கள்.

இதுவா மவுனம்?

"உள்ளம் பெருங்கோவில் ஊனுடம்பு ஆலயம் வள்ளல் பிரானுக்கு வாய் கோபுர வாசல்"

மனம் நினைப்பதை வாய் பேசுகிறது. கோவில் இருப்பதை கோபுரம் காட்டுகிறது. கோவிலில் இருக்கும் இறைவனை அடைய வேண்டுமானால் கோபுரவாசலில் நுழைந்தே இறைவனை அடைய வேண்டும். உள்ளத்தில் இருக்கும் இறைவனை அடையவாய் என்று கோபுர வாசலே வழி. கண்டதையும் பேசி அசுத்த கோபுரமாக்காது சுத்த பரமபத வாசலாக வாயை வைத்துக் கொள்ள வழி மவுனம் மட்டுமே.

நிகழ்விலே மனதை இறுத்தி பழகினால் மனம் அடங்கும். நேற்றைக்கு இழந்ததையும், நாளைக்கு பெறப்போவதையுமே நாம் சிந்தித்தால் மனம் விரியுமே அன்றி எப்படி அடங்கும். "மனம் அடங்காது மவுனம் இல்லை" மவுனம் இல்லாது மனம் ஒரு போதும் அடங்கல் இல்லை.

குடும்பத்தில் எவ்வளவு பெரிய பிரச்சனையின் போதும் சரி, பத்து வார்த்தை திட்டி, நாலு உதை உதைப்பதை விட ஒரு மணி நேரம் எதுவும் பேசாது மவுனமாய் இருந்து பாருங்கள். அப்போதுதான்



மவுனத்தின் மகத்தான சக்தியை உணர்வீர்கள்.

கோவிலில் உள்ள சிலை வரு கின்ற பக்தனிடம் எல்லாம் பேசத் தொடங்குமானால் பக்தனுக்கே அலுப்புத் தட்டி விடும். கோவிலுக் குப் போனால் அந்த சாமி நம்மை விடாதய்யா, உயிரை வாங்கி விடும் என்பான்.

சலனமற்ற மவுனம் பல அர்த்தங்களை கொண்டது. ஆயிர மாயிரம் வரிகள் கொண்ட இலக்கியங்களை விட இரண் டே வரிகள் கொண்ட திருக்குறள் உலகை கவர்ந்து இருக்கிற தல்லவா, ஆனந்தத்திற்கும், ஆரோக்கியத்திற்கும் மவுனம் மிக அவசியம்.

நீண்ட நாள் மவுனத்தில் இருப்பவன் ஞானம் கேட்டால் உடனே கிடைக்கும்.

– தொடரும்...

ஆதலினால் தியானம் செய்வீர்

பொதுவாக நமக்கு அபாயம் வரும் போது இரண்டு காரியங்களை செய்ய மனம் கட்டளையிடும். ஒன்று அங்கிருந்து ஓடிவிடு. இரண்டு எதிர்த்து போராடு. இதை ஆங்கிலத்தில் ஃபைட் ஆர் ஃப்ளைட் ரெஸ்பான்ஸ் என்பார்கள்.

இந்த இரண்டு கட்டளைகளில் எது மனதை ஆக்கிரமித்து இருந்தாலும் கோர்ட்டிஸால் என்கிற டென்சன் ஹார்மோனை உடல் முழுவதும் பரவச் செய்கின்றது. ஆனால் மனதை ஒருமுகப் படுத்தி தியானம் செய்யும் போது இந்த ஃபைட் ஆர் ஃப்ளைட் விசயங்கள் காணாமல் போய் ஹார்மோனை இயல்பாய் இரு என்று அதட்டி அமர வைக்கின்றதாம்.

இதை நியூயார்க்கிலுள்ள கொலம் பியா பிரஸ்பைட்ரியன் மெடிக்கல் சென் டரின் இயக்குனர் டாக்டர் மெஹ்மெட் ஓஸ் என்பவர் 2000 ஆம் ஆண்டு கண்டு பிடித்திருக்கிறார்.

அவர் ஒரு அறுவை சிகிச்சை நிபுணர், அவரிடம் வரும் இதய நோய்க்காரர்களை அறுவை சிகிச்சை மூலம் குணப்படுத்துகிறார். மிகவும் சிக்கலான கருவிகளை கொண்டு அறுவை சிகிச்சைகள் செய்து பிறகு மருந்து மாத்திரைகள் மூலம் மேலும் குணப்படுத்துகின்றேன். இவை மேற்

கத்திய மருத்துவ முறைகள். ஆனால் நான் இவற்றை நம்புவது போலவே இன்னொரு விசயத்தையும் நம்புகிறேன்.

அது கிழக்காசிய நாடுகளில் பல நூற்றாண்டுகளாக இருந்து வரும் நடைமுறை அது தியானம். அறுவை சிகிச்சைக்கு முன்பும், பின்பும் நோயாளிகளுக்கு நான் சிபாரிசு செய்வது தியானத்தைத்தான் என்கிறார்.

இதய அறுவை சிகிச்சைக்காக வரும் நோயாளிகளுக்கு 1.30 மணி நேரம் ஓடக்கூடிய சி.டி ஒன்றைக் கொடுக்கிறார்கள். அதில் மெல்லிய விநோதமான நியு ஏஜ் இசைப் பின்னணியில் ஓம் என்ற மந்திர ஓசை ஒலிக்கின்றது.

உங்களுக்கு மிகவும் பிடித்த பாது காப்பாக உணரும் இடத்தில் நீங்கள் இருப்பது போல் கண்களை மூடிக் கொண்டு கற்பனை செய்யுங்கள் என்கிறது சி.டி. குரல். அதன் பிறகு நோயாளி சி.டியும் கற்பனையுமாக நேரத்தை செலவிட வேண்டும். இது ஒரு வித நம்பிக்கையையும் தைரியத்தையும் கொடுப்பதாக டாக்டர்கள் கண்டறிந்திருக்கிறார்கள்.

பல அமெரிக்கர்களுக்கு இது புது அனுபவம். இதயத்தை திறந்து பார்க்கப் போகிறார்கள். வாழ்வா, சாவா என்று வருபர்களிடம் சிடி கொடுத்து தியானம் செய்யுங்கள் என்றால் கொஞ்சம் சிரமம் தான். ஆனாலும் அந்த பயமே தியானத்தை பயிற்சி செய்ய வைக்கிறதாம். ஒரு முறை முயற்சித்து விட்டால் அவர்களுக்கு பிடித்துப் போய் விடுகிறதாம்.

மரணப் போராட்டத்தில் இருந்து மீளவே அவர்கள் தியானத்தை கற்கிறார்கள். நாம் மரணத்தை புரிந்து கொண்டு அதை வெல்லவே பன்னெடுங் காலமாக தியானம் பயின்று வந்தோம். ஆயினும் தற்போதோ, ஆசனமும் தவமும் ஆர்வத்துடன் தான் கற்கின்றார்கள். ஆனால் அந்தோ பரிதாபம் சோம்பேறித்தனம் அவர்களை தொடர் பயிற்சி எடுக்க விடாமல் தடையாய் நிற்கிறது.

எழுமின்! விழுமின்!

எழுந்து நில் விழித்துக் கொள், லட்சியத்தை அடையும் வரை ஓயாது உழை. ஆதலால் தியானம் செய்வோம்.



இராமு பரதேசி

18ம் நூற்றாண்டு, ஆந்திராவில் ஓர் சிற்றூர், நள்ளிரவு தொடர்ந்து பெய்த கனமழையால் ஊரே வெள்ளக்காடாய் மாறிப்போயிருந்தது. கர்ப்பிணி பெண் ஒருத்தி ஆண் மகவு ஒன்றை பெற்றெடுத்தாள். உதவிக்கு கூட யாருமில்லை.

குழந்தை பிறந்ததில் இருந்து வீட்டில் எறும்புக்குக் கூட தானியமில்லை. வறுமையின் பிடியில் சிக்கித் தவித்தது குடும்பம், குழந்தைக்கு பால் கூட இல்லாது தாய் நோயில் வீழ்ந்து இறந்து போனாள்.

பிறந்ததும் தாயை விழுங்கி விட்டான் என்று ஊரே தூற்றியது. அனைவரின் புறக்கணிப்பால் ஒதுக்கப்பட்ட குழந்தையை கடவுள் அரவணைத்து கொண்டார். குழந்தை வளர, வளர அவனுக்குள் இறைச் சிந்தனையும் வளர்ந்தது.

எங்கு கதாகாலட்சேபம் நிகழ்ந்தாலும் பையன் முன் வரிசையில் அமர்ந்திருப்பான் எந்நேரமும் கோவில் குளம் என்று சுற்றிக் கொண்டே இருப்பான். பையன் வளர்ந்து வாலிபனானான். தந்தையும் ஒரு நாள் இறந்து போனார். கடமை முடிந்தது என்று மனம்போன போக்கில் திரியலானான்.

பட்டினத்தடிகள் ஞானக்கரும்பை தேடியதைபோன்று தன் ஞானக் குருவைத் தேடினான். இரவும் பகலும், காடு மேடும், கண்துஞ்சாது, உணவு ஈயாது தன் ஞானப்பயணத்தைத் தொடர்ந்தான். காலம் பல கடந்தது. கிழிந்த உடையும், நீண்ட தாடியும் பார்க்க பரிதாபமாய் இருந்தது. இறைவன் திருவுள்ளம் கொண்டான்.

ஓரிடத்தில் இராமாயண கதாகாலட்சேபம் நிகழ்ந்து கொண்டிருந்தது. மொழி விளங்கவில்லை. ஆயினும் சிறு வயதில் இருந்து கதை கேட்டதால், ஏதோ ஒன்று ஈர்த்தது. இராமன் பெயரை உச்சரித்தே அனுமன் மாபெரும் வலிமை அடைந்ததை பிரசங்கியார் மிக அருமையாக வர்ணித்து பாடிக்கொண்டிருந்தார்.

கேட்டுக் கொண்டிருந்த இளைஞனும் தன்னை அறியாமல் இராம நாமத்தை உச்சரிக்க ஆரம்பித்தான். மனம் இனித்தது. கேட்க செவி இனித்தது. பார்த்துக் கொண்டிருந்த கண் இனித்தது. ஐம்புலன்களையும் இனிக்க வைத்த அந்த சொல்லுக்கு மாபெரும் மந்திர வலிமை இருப்பதை அனுபவ பூர்வமாக உணர்ந்தான். அன்றிலிருந்து அந்த இளைஞன் இராம நாமத்தையே

உச்சரிக்கலானான். இராம நாமம் அவனுக்கு பசி களைப்பை தீர்த்து வைத்திருந்தது.

மனம் முழுக்க இராம நாமத்தில் லயித்திருந்தது. சிறிது நாட்கள் நடை பயணத்திற்கு பின் மரங்கள் அடர்ந்த சோலை ஒன்றை கண்டான். தான் தவம் செய்ய அவ்விடமே சிறந்தது என்று தீர்மானித்த இளைஞன் அங்கேயே அமர்ந்து இராம நாமத்தை ஜெபித்து கடும் தவம் இயற்றினான்.

அந்த இடம் இன்றைக்கு வில்லிய னூர் என்று அழைக்கப்படுகிறது. சோலையை சுற்றியுள்ள கிராமங்களில் இருந்து மக்கள் தவம் இயற்றும் சுவாமி யை தரிசிக்க தேடி வர ஆரம்பித்தனர். நெருங்கி சென்ற சிலர் அவரை விசாரிக் கவும் முற்பட்டனர். எந்த ஊர் சாமி? ராம்..ராம்... என்னப்பெயர் சாமி? ராம்.. ராம்...

கேட்ட கேள்விக்கெல்லாம் ராம்.. ராம்.. என்றே பதிலளித்ததால் மக்கள் அவரை ராமு பரதேசி என்றே அழைத் தனர். சுவாமிகளுக்கு மக்கள் குடிசை அமைத்துக் கொடுத்து தினமும் பால், பழம், உணவுகள் என்று அர்ப் பணித்தனர்.

சுவாமிகள் யாருக்கும் சிரமம் கொடுக்க விரும்புவதில்லை. ஆரம்பத் தில் உணவை திரும்பிக் கூட பார்க்க வில்லை. ஆயினும் அவ்வூர் மக்களின் அன்பிற்கிணங்க ஒருவேளை உணவை மட்டுமே உண்டார்.

ஒருநாள் வயலில் வேலை செய்து கொண்டிருந்த ஏழை விவசாயி ஒருவ னை பாம்பு தீண்டி விட்டது. அவனுக்கு விஷம் தலைகேறி இறந்து விட்டான்.

ஊர் மக்கள் அவனின் சடலத்தைத் தூக்கிக் கொண்டு இடுகாட்டிற்கு சென்றனர். எதிரே நடந்து வந்து கொண்டிருந்த இராமு பரதேசி விவ சாயின் சடலத்தை கண்டார், உடனே மக்களை பார்த்து கீழே இறக்குங்கள் என்றார். மக்கள் ஏதும் புரியாது தயக் கத்துடன் பிணத்தைக் கீழே இறக்கினர்.

இறந்து கிடந்த விவசாயினுடைய உடலை பார்த்த சுவாமிகள் கைகளை பலமாக தட்டி ராம்.. ராம்.. என்று யாரையோ அழைப்பதைபோல் அழைத் தார். எல்லோரும் வருவது யார் என்று பார்த்தனர். விவசாயியை கடித்த பாம்பு அங்கு விரைந்து வந்து அவரது காலடியில் சுருண்டு படுத்துக் கொண்டது.

அனைவரும் பயந்து பின் வாங்கி னர். சிலர் அதனை அடிக்கவும் முற்பட் டனர். சுவாமிகள் அவர்களை தடுத்து பாம்பை பார்த்து, அவனை காப்பாற்று என்றார். பாம்பு விரைந்து சென்று இறந்தவன் உடலில் இருந்த விஷத்தை உறிஞ்சத் தொடங்கியது. அனைவரும் ஆச்சரியத்துடன் பார்த்தனர்.

விவசாயி தூங்கி எழுபவன் போல் உயிர் பிழைத்து எழுந்து நின்றான். இராமு பரதேசி பாம்பை கையில் எடுத்துக் கொண்டு சென்றுவிட்டார். மாண்டவன் உயிர் பிழைத்த அதிச யத்தை எண்ணி ஊர் முழுவதும் சுவாமிகளின் பெருமை பேசப்பட்டது.

சுற்று வட்டாரங்களிலும் அவ ரின் புகழ் பரவத்தொடங்கியது. இவையெல்லாம் தன்னைப் பாதிக் கப்படாதவராய் எப்போதும் இராம நாமத்தை உச்சரிப்பதும், பாம்பு கடிப்பட்ட ஏழைகளுக்கு வைத்தியம் செய்தும் வந்தார். இவ்விதம் ஏழை களுக்கு மட்டுமே வைத்தியம் செய்வார். பணக்காரர்கள் இவரைத் தேடி வந்தால் திரும்பிக் கூட பார்க்க மாட்டார்.

காலம் பல சென்றது. திடீரென்று ஒருநாள் சுவாமிகள் யாருடனும் பேசாமலும், உணவு உட்கொள்ளாமலும்

ராம்.. ராம் என்று உறக்க உச்சரித்துக் கொண்டிருந்தார். மக்களுக்கு அவரின் மௌனம் புரியவில்லை. சீடர்களும் அவரைசு சுற்றி பல நாட்களாய் சோக மாய் அமர்ந்திருந்தனர். தியானத்தில் இருந்து கண் விழித்ததும் அவரின் மௌனத்திற்குண்டான காரணத்தை கேட்டனர் அவரின் சீடர்கள். சுவாமிகள் மௌனத்தைக் கலைத்து பேசத்தொடங்கினார். வருகின்ற மே மாதம் நீரினால் மிகப்பெரிய அழிவு ஏற்படப்போகிறது, நாம் எல்லோரும் அழியப் போகின்றோம். இறைவனின் கணக்கை யாரும் மாற்ற முடியாது. முடிந்தால் வேறு ஊருக்கு மாறிச் சென்று பிழைத்துக் கொள்ளுங்கள் என்றார்.

அடுத்து வருவது கடுமையான கோடைக் காலம். அதில் எப்படி சாமி பிரளயம் வரும் என்றனர் சீடர்கள். சுவாமி சிரித்தார், நீங்கள் நம்பாவிட்டால் பரவாயில்லை. ஊர் மக்களுக்கு நான் சொன்ன செய்தியாக அறிவித்து விடுங்கள் என்று கூறிவிட்டு மீண்டும் மௌனத்தில் ஆழ்ந்தார்.

ஊர் மக்கள் யாவரும் நம்பவில்லை. கோடை காலத்திலாவது... சூறாவளி யாவது, புயலுமாவது என்று சீடர்களை கேளி செய்தனர்.

சுவாமிகளிடம் ஆசி வாங்க வருவதை யும் குறைத்துக் கொண்டனர். சுவாமிகள் எதைப்பற்றியும் கவலைப்படாமல் இராம நாமத்தை உச்சரிப்பதையே குறிக்கோளாய் கொண்டு தவத்தில் ஆழ்ந்திருந்தார். 1840ம் ஆண்டு மே மாதத்தில் ஒருநாள் (புதுவை அரசு அறிக்கை அக்காலத்தில் பெரும் புயல் அடித்ததை உறுதிப்படுத்துகிறது)

திடீரென்று வானம் கருத்து, மெல்ல மழை பிடித்துக் கொண்டது. மக்கள் அதை கோடை மழை என்று பெரிதாக எடுத்துக் கொள்ளவில்லை. ஒரு நாள்,



இரண்டு நாள் என்று மழை வலுக்கத் தொடங்கியதே அல்லாமல், விட்ட பாடில்லை.

பகலா, இரவே என்றே தெரியாமல் வானம் இருண்டு கிடந்து. பலத்த சூறாவளிக் காற்றுடன் வானம் பிளந்து கொண்டது போல மழை கொட்டியது. பல ஆண்டுகளாய் வறண்டு கிடந்த சங்கராபரணி ஆற்றில் கரையை உடைத்துக் கொண்டு வெள்ளம்

பாய்ந்தோடியது. மக்கள் வெளியில் தலைக்கட்ட முடியவில்லை. ஊரில் யார் பிழைத்திருக்கிறார்கள், யார் வெள்ளத்தில் அடித்து செல்லப்பட்டனர் என்று கூட தெரியவில்லை.

மக்களுக்கு விபரீதம் புரிந்து, சுவாமி களின் பேச்சை கேட்காததைப் பற்றி மிகவும் வருந்தினர். ஒருவழியாய் 10 நாட்களுக்கு பின் புயல் ஓய்ந்தது. வெள்ளம் வடிந்து மக்கள் நடமாடத் தொடங்கினர். சுவாமிகள் கூறியது எவ்வளவு பெரிய சத்தியவாக்கு, நாம்தான் அதனை அலட்சியப்படுத்தி விட்டோம்.

சுவாமிகளின் நிலை என்னவானதோ என்று தேட ஆரம்பித்தனர். சுவாமிகள் இருந்த இடம் முழுக்க வெள்ளக்காடாய் இருந்தது. சுவாமிகளை வெள்ளம் அடித்து சென்றுவிட்டது போலும், கைக்கு கிடைத்த புதையலை நழுவ விட்டு விட்டோமே என்று மிகவும் வருந்தினர் மக்கள்.

18 ஆண்டுகளுக்கு பின்பு ஒருநாள் 1868ம் ஆண்டு வில்லியனூரில் ரயில் நிலையம் கட்டுவதற்காக அக்காலத்திய பிரெஞ்சு அரசு திட்டம் தீட்டி சுவாமிக ள் தங்கி இருந்த இடத்தை தேர்தெடுத்து,

அடிக்கல் நாட்ட தோண்டியபோது கடப்பாறையில் ரத்தம் தோய்ந்து வர பயந்துபோன வேலையாட்கள் கவனமாக மண்ணை அள்ளிப்பார்க்க அங்கே 18 ஆண்டுகளுக்கு முன்பு வெள்ளத்தில் அடித்து செல்லப்பட்ட தாக கருதிய ராமு பரதேசியின் உடல் தியான நிலையில் இருந்ததை கண்டு அதிசயித்தினர்.

செய்தி கேள்விப்பட்டு பக்தர்களும், சீடர்களும் கூடினர். பிரெஞ்சு அர சுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. அதிகாரிகள் சூழ சுவாமிகளை தூக்கி வெளியில் வைத்தனர். வெளியே எடுக்கப்பட்ட சுவாமிகளின் உடலில் எப்போதும் போல் சீதோஷ நிலையை கொண்டிருந்தது. சுவாமிகள் கண்களை திறந்து பார்ப்பார், என்று அனைவரும் 3 நாட்கள் வரை காத்திருந்தனர்.

3 நாட்களுக்கு மேலும் சுவாமிகள் கண்களை திறவாததால் அதிகாரிகள் உடலை புதைத்து விடுமாறு கட்ட ளையிட்டனர். சீடர்கள் சுவாமியின் உட லை திருமஞ்சனம் ஆட்டி பெரிய மண் குடுவையில் அமரச் செய்து தற்போது உள்ள இடத்தில் சமாதி செய் வித்தனர்.

அதற்கு மேல் வில்லியனூர் விவ சாயிகள் ஒன்று சேர்ந்து சிறு மண்டபம் ஒன்றை கட்டினர். இன்றைக்கு வழி பாட்டு தளமாக விளங்கும் இந்த சித்த ரின் ஜீவ சமாதி புதுச்சேரியில் இருந்து வில்லியனூர் செல்லும் பெருவழியில் சுல்தான்பேட்டை திருப்பத்தில் வலதுபுறம் சிறிய மண்டபம் போல் காணப்படுகிறது.

மாடத்து கற்பலகையில் இராம் பரதேசி சுவாமிகளின் திருவுருவம் செதுக்கப்பட்டுள்ளது. அதன் கீழே ஓம் மகாத்மா றாம் பர்தேசி சுவாமியார் சமாதி – வருஷம் 1868 என்று தமிழிலும் ஆங்கிலத்திலும் கல்வெட்டு ஒன்று உள்ளது.

திருக்கோவிலில் பௌர்ணமி வியாழக்கிழமைகளில் சிறப்பு வழி பாடுகள் நடைபெற்று வருகிறது. இந்நிகழ்விற்கு பின் சுமார் 82 ஆண் டுகளுக்கு பின் 1950 ஸ்ரீ அரவிந்தர் அவர்களின் உடல் 3 நாட்களுக்குப் பின் சமாதி செய்விக்கப்பட்டது நம் நினைவிற்கு வருகிறது. இவ்விரு சம்பவத்திற்கும் உள்ள தொடர்புகளை அவர்களே அறிவார்கள்.

பணிவுடன் நாம் இம்மகான்களின் பாதம் பணிவோம்... சாதுக்கள் சகவாசம் கூடுவோம்!

சந்தா செலுத்தும் அன்பர்களுக்கு...

அன்பிற்கினிய சாய் சொந்தங்களே..

நமது சாய் மகராஜ் குருவை தேடி பத்திரிக்கையை படித்து நீங்களும் சாயி சேவை செய்ய விரும்பினாலோ, இப்பத்திரிகையின் கருத்துகள் உங்களுக்கு பிடித்திருந்து சாயிமகராஜ் குருவை தேடி தொடர்ந்து வெளிவர விரும்பினாலோ கீழ்கண்ட முகவரிக்கு உங்கள் தட்சிணையை அனுப்பி வைத்து நீங்களும் சாயி சேவையில் பங்கு பெறலாம்.

சந்தா அனுப்புகின்றவர்கள் சந்தா அனுப்பலாம்

* 1 வருட சந்தா – ரூ. 150 (தபால் செலவு உள்பட)
* 3 வருட சந்தா – ரூ. 400 (தபால் செலவு உள்பட)
* ஆயுள் சந்தா – ரு. 1,500 (தபால் செலவு உள்பட)

காணிக்கை, சந்தா அனுப்புகின்றவர்களுக்கு மாதம்தோறும் சாயிமகராஜ் குருவை தேடி புத்தகம் உங்கள் இல்லம் தேடி வரும். காணிக்கை சந்தா அனுப்புகிறவர்கள் தவறாது தங்கள் முகவரியை கீழ்கண்ட முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

V. ஸ்ரீராம், ஆசிரியர்
'சாயி மகராஜ் குருவை தேடி',
93/34. K.H. ரோடு, 2வது மாடி (SBI பேங்க் எதிரில்),
அயனாவரம், சென்னை – 600 023.

ஆன்லைன் மூலம் காணிக்கை, சந்தா செலுத்த...

V.SRIRAM
INDIAN BANK (Purasaiwakkam Branch) Chennai
AC.No: 6219480677
IFS Code No: IDIB000P056.

Owned Publishsed and Printed by: V.SRIRAM From 17/7A, Palaniappa Ist Street, 1st floor, Ayyanavaram, Chennai - 23. At Printed by him at Chennai Offset Printer, No: 19/1, 21/2 Kitapath Khan Phathr St, Elles Road, Chennai-2. Editer:V.SRIRAM